Special EDITION

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

e-Paper | 15 புதன்கிழமை ஜூலை 2026 | 15 Wednesday July 2026 | Switzerland Edition

# உலகக் கிண்ண நாயகர்களுக்கு சூரிச்சில் பிரமாண்ட வரவேற்பு




# 4,000 ரசிகர்கள் மத்தியில் நன்றி தெரிவித்த சுவிஸ் அணி

2026 உலகக் கிண்ண கால்பந்து தொடரில் வரலாற்றுச் சாதனை படைத்து காலிறுதிவரை முன்னேறிய சுவிட்சர்லாந்து தேசிய அணி (Nati), தாயகத்திற்குத் திரும்பியதைத் தொடர்ந்து சூரிச்சின் கூதணூஞ்டிணஹுணணீடூச்ஞுத் பகுதியில் ஆயிரக்கணக்கான ரசிகர்களால் உற்சாகமாக வரவேற்கப்பட்டது.

சுமார் 4,000 ரசிகர்கள் கலந்து கொண்ட இந்த வரவேற்பு நிகழ்வில், அணி வீரர்களும் பயிற்சியாளர் முராத் யாகினும் ரசிகர்களின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தனர். அரைமணி நேரம் மட்டுமே நீடித்த நிகழ்வில் வீரர்கள் ரசிகர்களுடன் இணைந்து உலகக் கிண்ணப் பயணத்தை நினைவுகூர்ந்தனர்.

அணித்தலைவர் கிரானிட் ஜாகா, நாங்கள் உங்களை மகிழ்ச்சிப்படுத்தவே விரும்பினோம். சிறிதளவு அதிர்ஷ்டம் இருந்திருந்தால் இன்னும் முன்னேறியிருப்போம் என்று ரசிகர்களிடம் தெரிவித்தார். மேலும், உலகக் கிண்ணம் முழுவதும் ரசிகர்கள் வழங்கிய ஆதரவு அணிக்கு மிகப்பெரிய ஊக்கமாக இருந்ததாகவும் கூறினார். கோல்கீப்பர் கிரெகோர் கோபெல், அர்ஜென்டினாவுக்கு எதிரான போட்டியை காண அதிகாலை 3 மணிக்கு எழுந்து ரசிகர்கள் ஆதரவு அளித்தது தங்களை ஆச்சரியப்படுத்தியதாக தெரிவித்தார்.

உலகக் கிண்ணத்தில் பிரகாசித்த இளம் வீரர் ஜோஹான் மான்சாம்பி, ரசிகர்களின் அன்பிற்கு நன்றி தெரிவித்து, தனது முழங்கால் காயம் தற்போது முன்னேற்றமடைந்து வருவதாக கூறினார். எதிர்காலம் குறித்த கேள்விகளுக்கு பதிலளிக்காமல், முதலில் விடுமுறையை அனுபவிக்க விரும்புவதாக தெரிவித்தார்.

பயிற்சியாளர் முராத் யாகின், நாங்கள் அர்ஜென்டினாவை விட சிறப்பாக விளையாடினோம். இன்னும் அதிகம் சாதிக்க முடிந்திருக்கலாம். அணியின் செயல்பாடு பெருமைக்குரியது என்று கூறினார். மேலும், அர்ஜென்டினாவுக்கு எதிரான போட்டியை காண நள்ளிரவில் எழுந்த ரசிகர்களின் அர்ப்பணிப்பு தமக்கு மெய்சிலிர்ப்பை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டார்.

காலிறுதிப் போட்டியில் வெளியேற்றப்பட்ட பிபீல் எம்போலோவுக்கும் ரசிகர்கள் பெரும் ஆதரவை வெளிப்படுத்தினர். அவருக்காக எழுந்த ஆரவாரம் நிகழ்வின் முக்கிய தருணங்களில் ஒன்றாக அமைந்தது.

உலகக் கிண்ணத்தை வெல்ல முடியாவிட்டாலும், சுவிட்சர்லாந்து தேசிய அணி 2026 உலகக் கிண்ணத்தில் பதிவு செய்த வரலாற்றுச் சாதனை நாட்டின் கால்பந்து வரலாற்றில் புதிய அத்தியாயமாகக் கருதப்படுகிறது.

# சுபீட்சம்

SUPEEDSAM — EVERYTHING FOR PEOPLE

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

e-Paper | 15 புதன்கிழமை ஜுலை 2026 | 15 Wednesday July 2026 | Switzerland Edition




# சுவிட்சர்லாந்தில் விஷமுள்ள ஓக் புராசனரி புழுக்கள் அதிகரிப்பு

## பொதுமக்களுக்கு எச்சரிக்கை

பெர்ன்: சுவிட்சர்லாந்தில் இந்த கோடைக்காலத்தில் விஷத்தன்மை கொண்ட ஓக் புராசஷனரி மொத் (Oak Processionary Moth & OPM) புழுக்களின் பரவல் கணிசமாக அதிகரித்துள்ளதாக சுவிஸ் வன, பனி மற்றும் நிலப்பரப்பு ஆராய்ச்சி நிறுவனம் (WSL) எச்சரித்துள்ளது.

குறிப்பாக ஷாஃப்ஹவுசன் (Schaffhausen) மற்றும் கிழக்கு சுவிட்சர்லாந்து பகுதிகளில் இந்தப் புழுக்கள் அதிகளவில் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...



# சுவிசில் ஜெயானந்தமூர்த்திக்கு அஞ்சலி நிகழ்வுகள்

அண்மையில் காலமான முன்னாள் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகவியலாளருமான சேனாதிராசா ஜெயானந்தமூர்த்தி அவர்களுக்கான அஞ்சலி நிகழ்வு சுவிட்சர்லாந்து சூரிச் நகரில் ஞாயிறு பிற்பகல் நடைபெற்றது.

சுவிஸ் சிவராம் நினைவு மன்றம் ஏற்பாடு செய்த இந்நிகழ்விற்கு

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...

# சுவிட்சர்லாந்தில் காய்கறி விலைகள் உயர்வடைய வாய்ப்பு

பெர்ன்: சுவிட்சர்லாந்தில் நிலவும் கடும் வெப்பம் மற்றும் நீடித்துவரும் வறட்சி காரணமாக, எதிர்வரும் வாரங்களில் காய்கறி விலைகள் உயரக்கூடும் என விவசாய மற்றும் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

நாட்டின் பல பகுதிகளில் நீர்ப்பாசனத் தேவைகள் அதிகரித்துள்ள நிலையில், நீர் பற்றாக்குறையும் விவசாயிகளை பாதித்துள்ளது.

மிகுதி 03 ஆம் பக்கத்தில்...





ZUVERLÄSSIG. SAUBER. PÜNKTLICH.
IHR PARTNER FÜR JEDE AUFGABE.
NOLIMIT ONE GmbH
REINIGUNG.
TRANSPORT.
UMZUGSHILFE.
ALLES AUS EINER HAND – FÜR PRIVAT UND GEWERBE.
REINIGUNG
Sauberkeit, auf die Sie sich verlassen können.
TRANSPORT
Sicher, schnell und zuverlässig ans Ziel.
UMZUGSHILFE
Wir unterstützen Sie beim Umzug – stressfrei und effizient.
ZUVERLÄSSIG
Termingerecht und vertrauensvoll
ERFAHRENES TEAM
5–10 motivierte Mitarbeitende
FLEXIBEL
Kurzfristig einsatzbereit
FAIRE PREISE
Top Qualität zu fairen Konditionen
WARUM NOLIMIT ONE?
Professionelle Arbeit & höchste Qualität
Moderne Ausrüstung & 2 Nutzfahrzeuge
Privatkunden, Firmen & Verwaltungen
Individuelle Lösungen für Ihren Bedarf
Termingerecht & zuverlässig
JETZT ANFRAGEN
Wir sind für Sie da! Kostenlose Beratung.
078 222 2126
nolimitone26@gmail.com
Ostschweiz
Unterwegs für Sie in der Region
Jeder Auftrag
wird mit Sorgfalt und Respekt ausgeführt
Nachhaltig
Umweltbewusst handeln für eine saubere Zukunft
No Limit One – wir machen den Unterschied.
www.nolimitone.ch


தமிழின் குரலாய்
அக்கினி fm
Akkini
CLICK HERE

## சுவிசில் ஜெயானந்தமூர்த்திக்கு....











ஊடகவியலாளர் சண்.தவராசா தலைமை தாங்கினார்.

இந்நிகழ்வில் சுவிஸில் உள்ள தமிழ் ஊடகவியலாளர்கள், சமூகசெயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர்.

ஜெயானந்தமூர்த்தியின் திருவுருவப் படத்திற்கு சுடர் ஏற்றி மலர் அஞ்சலி செய்யப்பட்டதை தொடர்ந்து அஞ்சலி உரைகள் இடம்பெற்றது.

ஊடகவியலாளர் இரா.துரைரத்தினம் உரையாற்றுகையில் ஜெயானந்தமூர்த்தியை இங்கு பலரும் அரசியல்வாதியாக நாடாளுமன்ற உறுப்பினராகவே அறிந்திருப்பார்கள். ஆனால் அவர் நாடாளுமன்ற உறுப்பினர் என்பதற்கு அப்பால் சிறந்த பத்திரிகையாளராக சமூக செயற்பாட்டாளராக அடையாளம் காட்டிய ஒருவர். தான் வாழ்ந்த சமூகத்திற்கு நடந்த அநீதிகளை வெளிக்கொண்டு வந்தவர். அதற்கு சாட்சியாக எம்முன் இருப்பது அவர் எழுதிய அழிக்கப்பட்ட தமிழ் கிராமங்கள் என்ற நூலாகும் என தெரிவித்தார். மூத்த ஊடகவியலாளர் ஞா.குகநாதன், லவுசான் முன்னாள் மாநகரசபை உறுப்பினர் தம்பிப்பிள்ளை நமசிவாயம், கிருஸ்ணா அம்பலவாணர், பாலேந்திரன் , கணபதிப்பிள்ளை மாஸ்ரர்,சரவணப்பெருமாள் ஆகியோரும் உரையாற்றினர்.

## சுவிட்சர்லாந்தில் காய்கறி...

இதன் விளைவாக திறந்தவெளி வயல்களில் பயிரிடப்படும் உருளைக்கிழங்கு, லெட்டூஸ், பூக்கோசு, புரோக்கோலி மற்றும் பெருஞ்சீரகம் போன்ற காய்கறிகள் அதிக வெப்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுவிட்சர்லாந்தின் முன்னணி சில்லறை விற்பனை நிறுவனங்களான இணிணிணீ மற்றும் Migros, தற்போதைய நிலைமை கவலைக்குரியதாக இருப்பதாக தெரிவித்துள்ளன.

விவசாய உற்பத்தி குறைந்தால், அடுத்த சில வாரங்களில் காய்கறி விலைகள் அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளதாகக் கூறப்படுகிறது. எனினும், ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாத அறுவடை நிலவரம் தெளிவாகும் வரை பாதிப்பின் முழுமையான அளவை கணிக்க முடியாது என நிபுணர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

உள்ளூர் உற்பத்தி குறைவடைந்தால், வெளிநாடுகளிலிருந்து காய்கறிகளை இறக்குமதி செய்யத் தயாராக இருப்பதாக Coop மற்றும் Migros நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. ஆனால் ஐரோப்பாவின் பல நாடுகளும் இதேபோன்ற வெப்ப அலை மற்றும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், இறக்குமதி செலவுகளும் அதிகரிக்கக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், எதிர்வரும் காலங்களில் சுவிட்சர்லாந்தில் காய்கறி விலைகள் மேலும் உயர்வடையக்கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## சுவிட்சர்லாந்தில் விஷமுள்ள

வறண்ட மற்றும் வெப்பமான வசந்தகால வானிலை இதன் வேகமான பரவலுக்கு காரணமாக இருக்கலாம் என நிபுணர்கள் கருதுகின்றனர்.

ஓக் மரங்களின் கிளைகள் மற்றும் தண்டுகளில் காணப்படும் பெரிய வெள்ளை-சாம்பல் நிற வலைப்போன்ற கூடுகள் அல்லது இலைகள் அதிகமாக சேதமடைந்த மரங்கள் மூலம் இந்தப் புழுக்களின் இருப்பை அடையாளம் காணலாம்.

இந்தப் புழுக்களின் உடலில் உள்ள ஆயிரக்கணக்கான நுண் முடிகள் காற்றில் பரவி மனிதர்கள் மற்றும் விலங்குகளுடன் தொடர்பு கொள்ளும் போது உடல்நல பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும். கடந்த ஆண்டு 13 குழந்தைகள் ஒவ்வாமை காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த முடிகளில் உள்ள நச்சுப் பொருள் காரணமாக:

தோல் சிவத்தல், கடுமையான அரிப்பு, கொப்புளங்கள், கண், மூக்கு மற்றும் வாய் பகுதிகளில் எரிச்சல், காய்ச்சல், தலைச்சுற்றல், சோர்வு போன்ற அறிகுறிகள் ஏற்படலாம். அரிதான சந்தர்ப்பங்களில் உயிருக்கு ஆபத்தான அனபிலாக்டிக் ஷாக் (Anaphylactic Shock) நிலையும் ஏற்படக்கூடும்.

இந்தப் புழுக்களின் முடிகளுடன் தொடர்பு ஏற்பட்டதாக சந்தேகமிருந்தால், கண்கள் அல்லது தலைமுடியைத் தொடாமல் இருக்க வேண்டும். ஒட்டும் டேப்பின் உதவியுடன் முடிகளை அகற்றி, பாதிக்கப்பட்ட பகுதியை நன்றாக கழுவி, உடைகளை மாற்றி துவைத்து, உடனடியாக குளிக்குமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அறிகுறிகள் தென்பட்டால் மருத்துவரை அணுக வேண்டும். நச்சு தொடர்பான ஆலோசனைக்கு Tox Info Suisse – 145 என்ற எண்ணையும், அவசர மருத்துவ உதவிக்கு 144 என்ற எண்ணையும் தொடர்புகொள்ளலாம்.



# சூரிச் விமான நிலையத்தில் கடும் பயணிகள் நெரிசல்

## ஒரே நாளில் 1.10 லட்சம் பேர் பயணம்

கோடை விடுமுறை பயணங்கள் உச்சத்தை எட்டியுள்ள நிலையில், சனிக்கிழமை மட்டும் சூரிச் விமான நிலையத்தில் இருந்து சுமார் 1,10,000 பயணிகள் வெளிநாடுகளுக்குப் பயணம் செய்துள்ளனர். இதனால் விமான நிலையத்தில் நீண்ட வரிசைகளும் கடும் நெரிசலும் ஏற்பட்டது.

இந்த கோடையில் ஸ்பெயினின் மாட்ரிட், அலிகான்டே, பார்சிலோனா, போர்ச்சுகலின் போர்டோ, ஸ்வீடனின் ஸ்டோக்ஹோம் ஆகியவை அதிகம் விரும்பப்படும் ஐரோப்பிய சுற்றுலா தலங்களாக உள்ளன. நீண்ட தூரப் பயணங்களில் பாங்காக், சிங்கப்பூர், சியோல் மற்றும் இந்தியாவுக்கான விமானங்களுக்கும் அதிக தேவை காணப்படுகிறது.

இதற்கிடையில், ஜுன் மாத இறுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட புதிய இகூ ஸ்கேனர்கள் காரணமாக, இரண்டு லிட்டருக்கு குறைவான திரவப் பொருட்களை கைப்பையில் வைத்துச் செல்ல மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், மடிக்கணினி உள்ளிட்ட மின்னணு சாதனங்களையும் கைப்பையிலிருந்து வெளியே எடுக்க வேண்டிய அவசியம் இனி இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடும் வெப்பம் கால்நடை வளர்ப்பிலும் தாக்கம் – சுவிட்சர்லாந்தில் புதிய நடைமுறைகள்

சுவிட்சர்லாந்தில் அதிகரித்து வரும் வெப்பநிலை, கால்நடை வளர்ப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. மனிதர்களைப் போல பெரும்பாலான வளர்ப்பு விலங்குகள் வியர்க்க முடியாததால், ஒப்பீட்டளவில் குறைந்த வெப்பநிலையிலேயே அவை வெப்ப அழுத்தத்திற்கு உள்ளாகுகின்றன.

சுமார் 16ஓஇ வெப்பநிலையிலேயே பசுக்கள் பாதிக்கப்படத் தொடங்குகின்றன. 20ஓஇ-க்கு மேல் பன்றிகள் கடுமையான வெப்ப அழுத்தத்தை எதிர்கொள்கின்றன. இதனால் அவை குறைவாக உணவு உட்கொள்வதுடன், பால் மற்றும் முட்டை உற்பத்தியும் குறைகிறது.

இதனை சமாளிக்க, பண்ணைகளில் சக்திவாய்ந்த காற்றோட்ட வசதிகள், நீர் தெளிக்கும் அமைப்புகள், குளிரூட்டப்பட்ட தொழுவங்கள் மற்றும் போதிய குடிநீர் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. மேலும், கால்நடைகளுக்கு எளிதில் செரிமானமாகும் உணவுகள் வழங்கப்படுவதுடன், அதிகாலை மற்றும் மாலை நேரங்களில் மட்டுமே உணவளிக்கும் நடைமுறையும் பின்பற்றப்படுகிறது.

வெப்பமான பகல் நேரங்களில் கால்நடைகள் தொழுவங்களிலேயே வைக்கப்பட்டு, குளிர்ச்சியான மாலை நேரங்களில் மேய்ச்சலுக்கு அனுப்பப்படுகின்றன. எதிர்காலத்தில் அதிக வெப்பத்தைத் தாங்கக்கூடிய இனங்களை வளர்ப்பது மற்றும் பருவநிலைக்கு ஏற்ப கால்நடை வளர்ப்பு முறைகளை மாற்றுவது குறித்து சுவிஸ் விவசாயத் துறை கவனம் செலுத்தி வருகிறது.


ellaalan Fresh
Zürich நகரில் ஞாயிற்றுக்கிழமைகளிலும்
உங்களுக்குத்தேவையான
இறைச்சி, மீன், அரிசி, மற்றும்
உடனடி மரக்கறிகள், மலிகைப்பொருட்களை
பெறவேண்டுமா எங்களிடம் வாருங்கள்.
ATTA RICE
BASMATI RICE
TATA TEA
Moteren Strasse 9,
8005 Zürich.
TEL
044 543 48 84
ஞாயிற்றுக்கிழமைகளிலும்
திறந்திருக்கும்!
FRESH QUALITY BEST PRICE
Freshness You Can Trust, Quality You Deserve!


TAMIL ECOAM STEDO SWISS TAMIL ECONOMIC ORGANIZATION
STEDO
SWISS TAMIL ECONOMICS
DEVELOPMENT ORGANIZATION
உழைப்பால் இணைவோம்,
உயர்வாள் நிமிர்வோம்!
சுவிட்சர்லாந்து வாழ் தமிழ் வர்த்தகப் பெருமக்கள்,
இளம்தொழில்முனைவோர் மற்றும் புதிய
யோசனைகளுடன் முதலிட்டாளர்களை
ஒன்றிணைக்க செயற்படும் STEDO வில்
நீங்கள் இன்னும்
இணைந்து கொள்ளவில்லையா?
STEDOவில் இணைவோம் சாதிப்போம்
வணிக இணைப்பு வாய்ப்புகள்
இளம் தொழில் முனைவோருக்கு ஆதரவு
புதிய யோசனைகளுடன் முதலிட்டாளர்களுக்கான வாய்ப்புகள்
தொடர்புகளுக்கு
+41 79 591 05 55
+41 79 218 70 75
www.stedo.ch
hello@stedo.ch
இணைவோம்! வளர்வோம்! உலகம் நோக்கி முன்னேறுவோம்!



## சுவிட்சர்லாந்தில் கடும் வறட்சி:

# நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்த பொதுமக்களுக்கு அழைப்பு

சூரிச்: சுவிட்சர்லாந்தில் நீடித்து வரும் கடும் வறட்சி காரணமாக நாட்டின் பல பகுதிகளில் தண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு பல நகராட்சிகள் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளன.

புல்வெளிகளுக்கு தண்ணீர் பாய்ச்சுதல், வாகனங்களை கழுவுதல் மற்றும் தனியார் நீச்சல் குளங்களை மீண்டும் நிரப்புதல் போன்ற நடவடிக்கைகளுக்கு பல பகுதிகளில் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

வறட்சியால் அதிகம் பாதிக்கப்பட்டுள்ள துறைகளில் விவசாயமும் ஒன்று. போதிய நீர் இல்லாததால் காய்கறி உள்ளிட்ட பல பயிர்களின் வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளதாக சுவிஸ் விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

நீர்நிலைகளிலிருந்து பாசனத்திற்காக நீரைப் பெற முடியாத சூழல் உருவானால், விவசாயிகளுக்கு பெரும் பொருளாதார இழப்பு ஏற்படும் என்றும் அந்த அமைப்பு எச்சரித்துள்ளது. மேலும், பாசன வசதிகளை அமைப்பது அதிக செலவாக இருப்பதால், அனைத்து பயிர்களுக்கும் அதை நடைமுறைப்படுத்த முடியாத நிலை உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வீடுகளில் பயன்படுத்தப்படும் குடிநீரில் பெரும் பகுதி கழிவறை நீர்றக்கத்திற்கே செலவாகிறது என்ற தகவல் கவனத்தை ஈர்த்துள்ளது. சுவிட்சர்லாந்தில் வீடுகளில் பயன்படுத்தப்படும் தண்ணீரில் சுமார் மூன்றில் ஒரு பங்கு கழிவறை பயன்பாட்டிற்காகவே செலவிடப்படுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

ஒவ்வொரு முறையும் கழிவறை நீரிறக்கும்போது 6 முதல் 9 லிட்டர் வரை சுத்தமான குடிநீர் பயன்படுத்தப்படுவதாகவும், இதற்கு மாற்றாக தண்ணீர் தேவையில்லாத கம்போஸ்ட் கழிவறைகள் (Compost Toilets) சிறந்த தீர்வாக அமையக்கூடும் என்றும் சுற்றுச்சூழல் நிபுணர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

ஒரு நான்கு பேர் கொண்ட குடும்பம் இத்தகைய கழிவறையைப் பயன்படுத்தினால், நாளொன்றுக்கு 100 முதல் 150 லிட்டர் வரை குடிநீரைச் சேமிக்க முடியும் என்றும், ஆண்டுக்கு பல ஆயிரம் லிட்டர் தண்ணீர் மிச்சப்படுத்த இயலும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இதனிடையே, நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்டெபன் முல்லர்-ஆல்டர்மாட், பள்ளிகள், வணிக வளாகங்கள் மற்றும் மக்கள் அதிகம் கூடும் இடங்களில் தண்ணீர் இல்லாத கழிவறை அமைப்புகளைப் பயன்படுத்துவது குறித்து பரிசீலிக்கலாம் என தெரிவித்துள்ளார். அதேவேளை, குடிநீர் பற்றாக்குறை மேலும் தீவிரமடைந்தால், தனியார் நீச்சல் குளங்களை புதியதாக நிரப்புவதற்கு தடை விதிக்கப்படலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார். குடிநீர் முதன்மையாக



மக்களின் அத்தியாவசிய தேவைகளுக்கே பயன்படுத்தப்பட வேண்டும் என்பதே அரசின் முன்னுரிமை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சுவிட்சர்லாந்து குடிநீர், எரிவாயு மற்றும் வெப்பத் துறை சங்கத்தின் தகவலின்படி, நாட்டில் ஆண்டுதோறும் சுமார் ஒரு பில்லியன் கன மீட்டர் குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. அதில் பாதி வீடுகளுக்கும் சிறு தொழில்களுக்கும் செல்கிறது. இந்த அளவில் சுமார் 30 சதவீதம் கழிவறை நீரிறக்கத்திற்காகவே பயன்படுத்தப்படுவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

இருப்பினும், தற்போதைய வறட்சி சூழலில் தண்ணீரை விரைவாகச் சேமிப்பதற்கு தனியார் நீச்சல் குளங்களை நிரப்புவதைத் தவிர்ப்பது, புல்வெளிகளுக்கு தண்ணீர் பாய்ச்சுவதை நிறுத்துவது மற்றும் வாகனங்களை கழுவுவதை ஒத்திவைப்பது போன்ற நடவடிக்கைகளே மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்று நீர்வள நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

# லவுசான்- பாரிஸ் நேரடி ரயில் சேவையை மீண்டும் கொண்டுவர கோரிக்கை



2019 ஆம் ஆண்டு நிறுத்தப்பட்ட லவுசான் - பாரிஸ் கூளங ஃதூணூடிச் ரயில் சேவையை மீண்டும் அறிமுகப்படுத்தக் கோரி தொடங்கப்பட்ட மனுவிற்கு 10,000-க்கும் அதிகமான கையொப்பங்கள் கிடைத்துள்ளன.

இந்த சேவை வல்லோர்ப் (Vallorbe) வழியாக இயங்கிய நிலையில், பின்னர் ஜெனீவா வழி சேவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டதால் அது நிறுத்தப்பட்டது.

இரு நாடுகளுக்கிடையிலான ரயில் இணைப்புகளை வலுப்படுத்த வேண்டும் என்பதே மனுதாரர்களின் கோரிக்கையாகும்.

# குழந்தைகள் பராமரிப்பு செலவில் பெற்றோருக்கு நிதி நிவாரணம்

2030ஆம் ஆண்டு முதல், 8 வயதுக்குட்பட்ட குழந்தைகளை பராமரிப்பு மையங்களுக்கு அனுப்பும் குடும்பங்களுக்கு சுவிஸ் அரசு புதிய நிதி உதவியை வழங்கவுள்ளது. வாரத்தில் ஒரு நாள் குழந்தை பராமரிப்பு மையத்தை பயன்படுத்தினால் மாதம் குறைந்தது 100 சுவிஸ் ஃபிராங்க் வழங்கப்படும்.

கூடுதலாக ஒவ்வொரு அரை நாளுக்கும் 50 ஃபிராங்க் வழங்கப்படும். இதன் மூலம் முழு வாரமும் பராமரிப்பு மையத்தை பயன்படுத்தும் குடும்பங்கள் மாதத்திற்கு 500 ஃபிராங்க் வரை உதவி பெறலாம்.




# சூரிச் நகர கலை உதவித்தொகை 2026;
# 13 கலைஞர்கள் கௌரவிப்பு



சூரிச் நகரின் 2026ஆம் ஆண்டுக்கான கலை உதவித்தொகைகள் (Kunststipendien) வெள்ளிக் கிழமை Helmhaus அரங்கில் வழங்கப்பட்டன. நகர மேயர் ரஃபேல் கோல்டா (Raphael Golta & SP) இந்த விருதுகளை வழங்கினார்.

இந்த ஆண்டு 13 கலைஞர்கள் தேர்வு செய் யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் 18,000 சுவிஸ் ஃபிராங்க் மதிப்புள்ள கலைப் படைப்பு உதவித் தொகை வழங்கப்பட்டது.

இந்த உதவித்தொகை திட்டம் சூரிச் நகரின் கலாச ார ஊக்குவிப்பு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக ஆண்டுதோறும் வழங்கப்படுகிறது. சூரிச் நகரில் குறைந்தது ஒரு வருடமாக வசிக்கும் கலைஞர்கள் இதற்கு விண்ணப்பிக்க முடியும். வெற்றியாளர்கள் சிறப்பு நடுவர் குழுவின் பரிந்துரையின் அடிப்படை யில் தேர்வு செய்யப்படுகின்றனர்.

விருது பெற்ற கலைஞர்களின் படைப்புகளு டன், போட்டியின் இரண்டாம் சுற்றுக்கு தேர்வான கலைஞர்களின் படைப்புகளும் ஏதுடேட்டச்தண் அரங்கில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஆண்டு மொத்தம் 33 கலைப் படைப்புகள் இடம்பெற் றுள்ளன.



# வெளிநாட்டு வேர்களைக் கொண்ட வீரர்கள்தான் எப்போதும் சிறந்தவர்கள்

## சுவிஸ் தேசிய அணியின் வெற்றியைப் பாராட்டிய ஆண்ட்ரியாஸ் கிளார்னர்

சூரிச்: சுவிட்சர்லாந்து தேசிய கால்பந்து அணியின் அண்மைய வெற்றிகள் மற்றும் சிறப்பான செயல்பாடுகள், நாட்டில் குடியேற்றம் தொடர்பான விவாதங்களுக்கு மத்தியில் புதிய கவனத்தை ஈர்த்துள்ளன. குறிப்பாக, குடியேற்றக் கொள்கைகள் குறித்து கடுமையான நிலைப்பாடுகளுக்காக அறியப்படும் சுவிஸ் அரசியல்வாதி ஆண்ட்ரியாஸ் கிளார்னர் வெளியிட்ட கருத்து பரவலாக பேசப்படுகிறது.

தற்போதைய சுவிட்சர்லாந்து தேசிய கால்பந்து அணியில் இடம்பெற்றுள்ள 26 வீரர்களில் 16 பேருக்கு வெளிநாட்டு வேர்கள் அல்லது குடியேற்றப் பின்னணி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இவர்களில் பலரின் பெற்றோர் அல்லது குடும்பத்தினர் பால்கன் நாடுகள், துருக்கி, ஆப்பிரிக்கா, தென் அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் பிற பகுதிகளிலிருந்து சுவிட்சர்லாந்திற்கு குடிபெயர்ந்தவர்களாக உள்ளனர்.

இந்த நிலையில், வெளிநாட்டு வேர்களைக் கொண்ட வீரர்கள்தான் எப்போதும் சிறந்தவர்கள் என ஆண்ட்ரியாஸ் கிளார்னர் குறிப்பிட்டதாக சுவிஸ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. குடியேற்றம் தொடர்பாக விமர்சன கருத்துகளை முன்வைத்து வந்த அரசியல் வட்டாரத்திலிருந்து இவ்வாறான பாராட்டு வெளிவந்துள்ளது குறிப்பிடத்தக்கதாக கருதப்படுகிறது.

பல ஆண்டுகளாக சுவிஸ் தேசிய அணி, பல்வேறு இன, மொழி மற்றும் கலாச்சார பின்னணிகளைச் சேர்ந்த வீரர்களின் பங்களிப்பால் வலுப்பெற்று வருகிறது. கிரானிட் ஷாகா, ஷெர்தான் ஷகிரி உள்ளிட்ட பல முன்னணி வீரர்கள் குடியேற்றக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அரசியல் மற்றும் சமூக ஆய்வாளர்களின் கருத்துப்படி, சுவிஸ் கால்பந்தின் வெற்றி, குடியேற்ற சமூகங்கள் நாட்டின் வளர்ச்சிக்கும் சர்வதேச சாதனைகளுக்கும் வழங்கும் பங்களிப்பை வெளிப்படுத்துகிறது. பல்வேறு பின்னணிகளைச் சேர்ந்த வீரர்கள் ஒன்றிணைந்து தேசிய அணிக்காக விளையாடுவது, சுவிட்சர்லாந்தின் பல்வகைமை மற்றும் ஒருங்கிணைப்பு கொள்கையின் வெற்றியாகவும் பார்க்கப்படுகிறது. ஐரோப்பாவின் பல நாடுகளில் குடியேற்றம் தொடர்பான விவாதங்கள் தீவிரமடைந்து வரும் வேளையில், சுவிஸ் தேசிய அணியின் வெற்றி மற்றும் அதில் குடியேற்றப் பின்னணியுடைய வீரர்கள் வகிக்கும் முக்கிய பங்கு குறித்து புதிய விவாதங்களும் பாராட்டுகளும் உருவாகி வருகின்றன.

சமூகத்தின் பல தரப்பினரும், விளையாட்டு துறையில் திறமை மற்றும் அர்ப்பணிப்பே முக்கியமானது என்பதை இந்த வெற்றி மீண்டும் நிரூபித்துள்ளதாகக் கருத்து தெரிவித்து வருகின்றனர்.



# சுவிட்சர்லாந்து – பிரித்தானியா விரிவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்த பேச்சுவார்த்தை நிறைவு

பெர்ன்: சுவிட்சர்லாந்தும் ஐக்கிய இராச்சியமும் (பிரித்தானியா) விரிவாக்கப்பட்ட சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்திற்கான பேச்சுவார்த்தைகளை வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளன.

சேவைத் துறையை மையமாகக் கொண்ட இந்த புதிய ஒப்பந்தம், இரு நாடுகளுக்கிடையிலான வர்த்தகம், முதலீடுகள் மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் நோக்கத்துடன் உருவாக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக நிதிச் சேவைகள் மற்றும் அறிவியல் சார்ந்த துறைகளில் செயல்படும் நிறுவனங்கள் அதிக நன்மை பெறும் என சுவிஸ் கூட்டாட்சி ஜனாதிபதி கி பார்மலின் (Guy Parmelin) மற்றும் பிரித்தானிய வர்த்தக அமைச்சர் பீட்டர் கைல் (Peter Kyle) தெரிவித்தனர்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் நிர்வாகத் தடைகள் குறைக்கப்படுவதுடன், சந்தை அணுகல் வாய்ப்புகளும் மேம்படுத்தப்படவுள்ளன. மேலும், தொழில்முறை நிபுணர்கள் மற்றும் வணிகப் பயணிகள் எல்லை தாண்டி எளிதாக பணியாற்றுவதற்கான வசதிகளும் ஏற்படுத்தப்படுகின்றன.

தரவுப் பரிமாற்றம் மற்றும் அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பிற்கான சட்டப்பாதுகாப்புகளும் வலுப்படுத்தப்பட உள்ளன.

இந்த ஒப்பந்தத்தை 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் கையொப்பமிடத் தயார்படுத்துவதே இலக்காக இருப்பதாக கி பார்மலின் தெரிவித்துள்ளார். அதன்பின் இரு நாடுகளிலும் உள்நாட்டு அங்கீகார நடைமுறைகள் முன்னெடுக்கப்படும்.

பிரித்தானிய அமைச்சர் பீட்டர் கைல், இந்த ஒப்பந்தத்தை வரலாற்றுச் சிறப்புமிக்க உடன்படிக்கை என்று வர்ணித்துள்ளார்.




# வெளிநாடுகளுக்கு 4 கோடி பிராங்குகள் அதிகமாக வழங்கப்பட்ட AHV/IV ஓய்வூதியம் மீட்பதில் பெரும் சிக்கல்

சுவிட்சர்லாந்தின் AHV மற்றும் IV ஓய்வூதியத் திட்டங்கள் மூலம் வெளிநாடுகளில் வசிக்கும் பயனாளர்களுக்கு சுமார் 4 கோடி சுவிஸ் பிராங்குகள் அதிகமாக வழங்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இந்தப் பணத்தை மீட்டெடுப்பது சட்டபீதியாகவும் நிர்வாக ரீதியாகவும் மிகவும் சிக்கலானதாக இருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பெரும்பாலான சந்தர்ப்பங்களில், ஓய்வூதியம் பெறுபவர்களின் மரணம், வெளிநாட்டுக்குக் குடிபெயர்தல் அல்லது வாழ்க்கைச் சூழ்நிலையில் ஏற்பட்ட மாற்றங்கள் அதிகாரிகளுக்கு தாமதமாக அறிவிக்கப்படுவதால், தகுதியில்லாதவர்களுக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இதுபோன்ற ஒரு வழக்கில், மாலி நாட்டைச் சேர்ந்த ஒருவர், சுவிட்சர்லாந்தில் வசிப்பதாக உறவினர்கள் மூலம் போலியான முகவரியைப் பயன்படுத்தி பல ஆண்டுகள் அஏங ஓய்வூதியம் பெற்றது கண்டுபிடிக்கப்பட்டது. பின்னர் அவரிடம் 72,000 சுவிஸ் பிராங்குகள் திருப்பி வசூலிக்கப்பட்டது. இதை எதிர்த்து அவர் தாக்கல் செய்த மேல்முறையீட்டை 2025 ஆம் ஆண்டு கூட்டாட்சி நிர்வாக நீதிமன்றம் நிராகரித்தது.

ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கு வழங்கப்பட்ட ஓய்வூதியங்களை மீட்க சில ஒத்துழைப்பு அமைப்புகள் இருந்தாலும், பல வழக்குகள் நீதிமன்றம் வரை செல்வதால் காலதாமதமும் கூடுதல் செலவும் ஏற்படுகின்றன. மேலும், பொதுவாக ஐந்து ஆண்டுகளுக்குப் பிறகு பணத்தை மீட்கும் உரிமை காலாவதியாகிவிடுகிறது. மோசடி நிரூபிக்கப்பட்டால் மட்டுமே 15 ஆண்டுகள் வரை பணத்தை வசூலிக்க சட்டம் அனுமதிக்கிறது.

இந்தப் பிரச்சினையைத் தொடர்ந்து, மரணப் பதிவுகள் உள்ளிட்ட தகவல்களை ஏழு ஐரோப்பிய நாடுகளுடன் தானியங்கி முறையில் பரிமாறும் புதிய அமைப்பை சுவிட்சர்லாந்து அறிமுகப்படுத்தியுள்ளது. இருப்பினும், தரவுகளை ஆய்வு செய்யும் முறை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் இன்னும் குறைபாடுகள் உள்ளதாக கூட்டாட்சி நிதி கண்காணிப்பு அமைப்பு (EFK) எச்சரித்துள்ளது.

# ஜி7 போராட்ட பாதுகாப்புச் செலவு:




# பிரான்ஸ் நிதியுதவியை மறுத்ததால் சுவிட்சர்லாந்துக்கு ரூ.30 மில்லியன் பிராங்க் சுமை

பிரான்சின் எவியான் (vian) நகரில் நடைபெற்ற ஜி7 உச்சி மாநாட்டை முன்னிட்டு, அதற்கு எதிரான போராட்டங்கள் அண்டை நாடான சுவிட்சர்லாந்தின் ஜெனீவா நகரிலும் நடைபெற்றன. பிரான்சில் ஆர்ப்பாட்டங்களுக்கு அனுமதி வழங்கப்படாததால், பல போராட்டக்காரர்கள் ஜெனீவாவில் திரண்டனர். சில இடங்களில் வன்முறை மற்றும் மோதல்களும் ஏற்பட்டன.

இந்த நிலையை சமாளிக்க, சுவிட்சர்லாந்தின் பல கான்டன்களிலிருந்து நூற்றுக்கணக்கான காவல்துறையினரும், சுமார் 4,000 சுவிஸ் இராணுவ வீரர்களும் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். இதற்காக சுமார் 30 மில்லியன் சுவிஸ் பிராங்க் செலவாகியுள்ளதாக ஜெனீவா பாதுகாப்புத் துறை தெரிவித்துள்ளது.

இந்தச் செலவில் பிரான்சும் பங்கெடுக்க வேண்டும் என்று சுவிட்சர்லாந்து எதிர்பார்த்தது. இதற்காக இரு நாடுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. ஆனால், எந்த உடன்பாடும் எட்டப்படவில்லை என்று சுவிஸ் வெளியுறவுத் துறை (EDA) உறுதிப்படுத்தியுள்ளது. இருப்பினும், எதிர்காலத்தில் பிரான்ஸ் ஓரளவு நிதியுதவி வழங்கும் வாய்ப்பு மிகவும் குறைவாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

முன்னதாக, அந்நாள் சுவிஸ் கூட்டாட்சித் தலைவர் கீ பார்மலின் (Guy Parmelin), பாதுகாப்புச் செலவில் பிரான்ஸ் பங்களிக்க வேண்டும் என்று வலியுறுத்தியிருந்தார். எனினும், தற்போது அந்த முயற்சி வெற்றியளிக்காததால், இந்தப் பெரும் செலவின் பெரும்பகுதியை சுவிட்சர்லாந்தே ஏற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. செலவின் ஒரு பகுதியை மத்திய அரசு ஏற்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதேவேளை, குறைந்தபட்சம் ஒரு பகுதியையாவது பிரான்ஸ் வழங்கும் என்ற நம்பிக்கையை ஜெனீவா மாநிலம் இன்னும் கைவிடவில்லை.



# சுவிட்சர்லாந்தில் கடும் வறட்சி; குடிநீருக்கு பாதிப்பு வருமா?

## அதிகாரிகள் விளக்கம்

சுவிட்சர்லாந்தில் நிலவி வரும் கடுமையான வெப்ப அலை மற்றும் மழையின்மை காரணமாக நாட்டின் பெரும்பாலான பகுதிகள் தற்போது கடும் வறட்சியை எதிர்கொண்டு வருகின்றன. இந்த நிலைமை விரைவில் மாறும் அறிகுறிகள் எதுவும் இல்லை என்பதால், குடிநீர் விநியோகம் பாதிக்கப்படுமா என்ற கவலை மக்களிடையே எழுந்துள்ளது.

ஜூலை 9ஆம் தேதி வெளியிடப்பட்ட ஷூனுஞுனுணிமீனுதீண் அறிக்கையின்படி, நாட்டின் முக்கிய ஏரிகள் மற்றும் நதிகளின் நீர்மட்டம் இந்த பருவத்திற்கே வரலாறு காணாத அளவுக்கு குறைந்துள்ளது. மேலும், சுவிட்சர்லாந்தின் நீர்த்தேக்கங்களிலும் நீர் நிரம்பியுள்ள அளவு மிகவும் குறைவாக இருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் நாட்டின் பெரும்பாலான பகுதிகள் தற்போது வறட்சிக்கான நிலை 4 (High Danger) என்ற உயர்ந்த அபாய நிலையில் உள்ளன.

### நிலை 4 எச்சரிக்கை என்றால் என்ன?

சுவிஸ் அதிகாரிகளின் விளக்கப்படி, இந்த நிலை தொடர்ந்தால் வறட்சி மேலும் தீவிரமடையும். அதன் காரணமாக உள்ளூர் அல்லது பிராந்திய அளவில் நீர் பயன்பாட்டுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்படலாம். பொதுக் குடிநீர் ஊற்றுகள் (fountains) தற்காலிகமாக மூடப்படலாம். தோட்டங்களுக்கு குழாய் மூலம் தண்ணீர் பாய்ச்சுவது, கார்கள் கழுவுவது போன்றவற்றுக்கும் தடை விதிக்கப்படலாம். அதேசமயம், காட்டுத்தீ அபாயமும் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்கும்.

### காலநிலை மாற்றம் நீர் வளத்தை மாற்றுகிறது

சுவிஸ் அரசு கூறுவதாவது, சுவிட்சர்லாந்தில் நீர் வளம் முற்றிலும் இல்லாமல் போகாது. இருப்பினும், காலநிலை மாற்றம் காரணமாக கோடை காலங்களில் நீர் கிடைப்பது குறையும். மக்களுக்கும், விவசாயத்திற்கும், இயற்கைக்கும் அதிகம் தேவைப்படும் நேரத்திலேயே தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளது.

ஆராய்ச்சியாளர்கள் எதிர்காலத்தில் குடிநீர்

# சுவிட்சர்லாந்தில் கடும் வறட்சி; குடிநீருக்கு பாதிப்பு வருமா?

## அதிகாரிகள் விளக்கம்



விநியோகம், விவசாயம் மற்றும் மின்சார உற்பத்தி ஆகியவற்றுக்கிடையே நீர் பயன்பாட்டில் போட்டி அதிகரிக்கும் என்றும், உள்ளூர் அளவில் தண்ணீர் பற்றாக்குறை அடிக்கடி ஏற்படக்கூடும் என்றும் எச்சரிக்கின்றனர்.

### தற்போது குடிநீருக்கு ஆபத்து உள்ளதா?

தற்போதைய சூழலில் சுவிட்சர்லாந்தின் குடிநீர் விநியோகம் பொதுமக்களின் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்யும் அளவில் உள்ளது. நாட்டின் குடிநீரில் சுமார் 40 சதவீதம் நிலத்தடி நீரிலிருந்தும், 40 சதவீதம் இயற்கை ஊற்றுகளிலிருந்தும், மீதமுள்ள 20 சதவீதம் ஏரிகள் மற்றும் நதிகளிலிருந்தும் பெறப்படுகிறது.

தொடர்ச்சியான வெப்ப அலைகள் நீர் கையிருப்பைக் குறைத்தாலும், குடிப்பது, சமைப்பது மற்றும் குளிப்பது போன்ற அத்தியாவசிய தேவைகளுக்கு தற்போது குழாய் நீர் போதுமானதாகவே உள்ளது.

### வறட்சி மேலும் நீடித்தால் என்ன ஆகும்?

சுவிட்சர்லாந்தின் கூட்டாட்சி சட்டப்படி, வறட்சி நிலை 4 தொடர்ந்து நான்கு நாட்கள் நீடித்தால், ஒவ்வொரு நபருக்கும் தினமும் குறைந்தபட்சம் 4 லிட்டர் குடிநீர் வழங்கப்பட வேண்டும். இந்த அளவு, அந்தப் பகுதியில் வாழும் மக்கள் தொகை, விவசாயப் பண்ணைகள் மற்றும் அத்தியாவசிய பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடப்படும்.

இந்த குடிநீர் பெரும்பாலும் பாட்டில்களில் வழங்கப்படும்; குழாய் நீராக இருக்க வேண்டிய அவசியமில்லை.

அத்தகைய அவசரநிலையில் குளிப்பது, துணி அல்லது பாத்திரங்கள் கழுவுவது, கழிப்பறையை வழக்கம்போல் பயன்படுத்துவது போன்றவற்றில் கட்டுப்பாடுகள் இருக்கக்கூடும். இருப்பினும், குடிப்பதற்கு தேவையான குறைந்தபட்ச பாதுகாப்பான நீர் அனைவருக்கும் வழங்கப்படும். மேலும், ஒவ்வொரு மாநிலமும் (Canton) தேவைக்கேற்ப இதைவிட அதிகளவு குடிநீரை வழங்க அதிகாரம் பெற்றுள்ளது.

### மக்கள் என்ன செய்ய வேண்டும்?

அவசரநிலையை கருத்தில் கொண்டு, ஒவ்வொருவரும் வீட்டில் குடிநீரை சேமித்து வைத்திருக்குமாறு சுவிஸ் அரசு அறிவுறுத்தியுள்ளது.

தேசிய பொருளாதார வழங்கல் அலுவலகம் (FONES) வெளியிட்டுள்ள அவசரகால இருப்புப் பட்டியலின்படி, ஒரு நபருக்கு வாரத்திற்கு குறைந்தது 9 லிட்டர் பாட்டில் குடிநீரை வீட்டில் இருப்பாக வைத்திருக்க வேண்டும்.

தண்ணீர் கெட்டுப்போகாது என்றாலும், அதை சேமித்து வைத்திருக்கும் பிளாஸ்டிக் பாட்டில்களின் தரம் காலப்போக்கில் பாதிக்கப்படலாம். எனவே, ஒரு முதல் இரண்டு ஆண்டுகளுக்குள் அந்த தண்ணீரைப் பயன்படுத்திவிட்டு, அதற்குப் பதிலாக புதிய பாட்டில்களை வாங்கி சேமித்து வைக்க அரசு பரிந்துரைக்கிறது.

தற்போதைக்கு குடிநீர் விநியோகத்தில் உடனடி நெருக்கடி இல்லை என்றாலும், நீடிக்கும் வெப்ப அலை மற்றும் வறட்சி காரணமாக தண்ணீரை சிக்கனமாகவும் பொறுப்புடனும் பயன்படுத்துவது அவசியம் என அதிகாரிகள் வலியுறுத்தியுள்ளனர்.

## சுவிஸ் 10 மில்லியன் சனத்தொகை கட்டுப்பாடு




ஐங்கரன் விக்கினேஸ்வரா

# பொது வாக்கெடுப்பு தோல்வியின் விளைவு!

**சுவிட்சர்லாந்தின் தற்போதைய மக்கள் தொகை சுமார் 9 மில்லியனை எட்டியுள்ள நிலையில், வரவிருக்கும் தசாப்தங்களில் அது 10 மில்லியனைத் தாண்டும் என அரசின் கணிப்புகள் தெரிவித்தன. இதனால் வீட்டு வசதி, போக்குவரத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொது சேவைகள் மீது அதிக அழுத்தம் ஏற்படும் என்ற அச்சம் சில அரசியல் கட்சிகளாலும் சமூக அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்டது**

சுவிட்சர்லாந்தில் மக்கள்தொகையை பத்து மில்லியனாகக் கட்டுப்படுத்தும் பொது வாக்கெடுப்பு தோல்வி அடைந்ததன் மூலம், நாடு பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிசெய்துள்ளதுடன், ஐரோப்பிய ஒன்றியத்துடனான (EU) தடையற்ற தொழிலாளர் இயக்க ஒப்பந்தத்தையும் பாதுகாத்துள்ளது.

சுவிட்சர்லாந்தில் மக்கள்தொகை வளர்ச்சி, குடியேற்றக் கொள்கை மற்றும் நாட்டின் எதிர்கால வள மேலாண்மை தொடர்பான விவாதங்கள் கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருகின்றன. இந்தப் பின்னணியில், நாட்டின் மக்கள்தொகையை 10 மில்லியன் பேருக்கு மேல் செல்லாமல் கட்டுப்படுத்த வேண்டும் (No to Switzerland with 10 million) என்ற கோரிக்கையுடன் ஒரு பொது வாக்கெடுப்பு முன்மொழிவு முன்வைக்கப்பட்டது. இந்த முன்மொழிவு சுவிஸ் அரசியலில் மட்டுமல்லாது, ஐரோப்பா முழுவதும் குடியேற்றம் மற்றும் தேசிய அடையாளம் குறித்த விவாதங்களுக்கு புதிய பரிமாணத்தை உருவாக்கியது.




### சுவிட்சர்லாந்து நேரடி ஜனநாயகம்:

சுவிட்சர்லாந்து உலகில் நேரடி ஜனநாயகத்தின் சிறந்த எடுத்துக்காட்டாகக் கருதப்படும் நாடாகும். சுமார் 10 மில்லியன் மக்களைக் கொண்ட இந்த நாடு, அரசியல் முடிவுகளை நாடாளுமன்றம் மட்டுமன்றி மக்களும் நேரடியாக எடுக்கும் தனித்துவமான முறையைப் பின்பற்றுகிறது. இதன் மையக் கருவியாக பொதுவாக்கெடுப்பு (Referendum) விளங்குகிறது.

பொதுவாக்கெடுப்பு என்பது ஒரு முக்கியமான சட்டம், அரசியலமைப்புத் திருத்தம் அல்லது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த கொள்கை தொடர்பாக மக்களிடம் நேரடியாக வாக்கெடுப்பு நடத்தி அவர்களின் முடிவைப் பெறும் ஜனநாயக நடைமுறையாகும். சுவிட்சர்லாந்தில் மக்கள் வெறும் தேர்தல்களில் மட்டும் வாக்களிப்பதில்லை; அரசின் முக்கிய முடிவுகளிலும் நேரடியாக பங்கேற்கின்றனர்.

சுவிட்சர்லாந்தில் பொதுவாக்கெடுப்பின் முக்கிய நோக்கம் அதிகாரம் மக்களிடமே இருக்க வேண்டும் என்பதாகும். நாடாளுமன்றம் நிறைவேற்றிய சட்டம் மக்களின் விருப்பத்திற்கு எதிரானதாக இருப்பதாக சிலர் கருதினால், அதனை பொதுவாக்கெடுப்பிற்கு கொண்டு வர முடியும். மேலும், அரசியலமைப்பில் மாற்றம் செய்ய வேண்டுமானால் அது கட்டாயமாக மக்களின் ஒப்புதலைப் பெற வேண்டும். இதனால் அரசியல் அதிகாரம் ஒரு சிலரின் கைகளில் மட்டுமே குவியாமல், மக்களின் கண்காணிப்பின் கீழ் செயல்படுகிறது.

### குடியேற்றத்தை கட்டுப்படுத்தல்:

சுவிட்சர்லாந்தின் தற்போதைய மக்கள் தொகை சுமார் 9 மில்லியனை எட்டியுள்ள நிலையில், வரவிருக்கும் தசாப்தங்களில் அது 10 மில்லியனைத் தாண்டும் என அரசின் கணிப்புகள் தெரிவித்தன. இதனால் வீட்டு வசதி, போக்குவரத்து, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் பொது சேவைகள் மீது அதிக அழுத்தம் ஏற்படும் என்ற அச்சம் சில அரசியல் கட்சிகளாலும் சமூக அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்டது.

இந்தக் கவலைகளை அடிப்படையாகக் கொண்டு, வலதுசாரி தேசியவாத அரசியல் சக்திகள் மக்கள்தொகை 10 மில்லியனை எட்டியவுடன் குடியேற்றத்தை கடுமையாகக் கட்டுப்படுத்தும் வகையில் அரசியலமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என வலியுறுத்தின. அவர்களது வாதப்படி, நாட்டின் இயற்கை வளங்கள் வரையறுக்கப்பட்டவை; அதிக குடியேற்றம் சுவிஸ் வாழ்க்கைத் தரத்தையும் கலாசார அடையாளத்தையும் பாதிக்கக்கூடும்.

ஆனால் இந்த முன்மொழிவுக்கு எதிராக அரசாங்கம், பெரும்பாலான பிரதான அரசியல் கட்சிகள், தொழிலாளர் அமைப்புகள் மற்றும் வணிகத் துறைகள் ஒன்றிணைந்து பிரசாரம் செய்தன. சுவிஸ் பொருளாதாரம் பெருமளவில் வெளிநாட்டு தொழிலாளர்களை நம்பியுள்ளது என்றும், குடியேற்றத்தை கடுமையாகக் கட்டுப்படுத்துவது தொழிலாளர் பற்றாக்குறையை உருவாக்கும் என்றும் அவர்கள் எச்சரித்தனர். குறிப்பாக சுகாதாரம், கட்டுமானம், தொழில்நுட்பம் மற்றும் சேவைத் துறைக



ளில் வெளிநாட்டு பணியாளர்கள் முக்கிய பங்கு வகிப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டினர்.

மேலும், சுவிட்சர்லாந்து மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்கிடையிலான சுதந்திரமான மக்கள் நகர்வு ஒப்பந்தங்களும் இந்த விவாதத்தில் முக்கிய இடம் பெற்றன. 10 மில்லியன் உச்சவரம்பு நடைமுறைக்கு வந்தால், ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகள் பாதிக்கப்படலாம் என்ற அச்சமும் வெளியிடப்பட்டது. இது நாட்டின் வர்த்தகம், முதலீடு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பில் எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று எதிர்ப்பாளர்கள் வாதிட்டனர்.

## சுவிஸ் பொது வாக்கெடுப்பு முடிவுகள்:

14.06.26 சுவிஸ் பொது வாக்கெடுப்பு முடிவுகளின் படி, 2050 க்குள் மக்கள் தொகை 10 மில்லியனை தாண்டக்கூடாது. அப்படி தாண்டும் பட்சத்தில் சுவிஸ் அரசு ஐரோப்பிய ஒன்றியத்துடன் பல விடயங்களில் சுதந்திரமாக செற்படும் செயலாக்கத்தை இரத்து செய்யும் திட்ட வரைபு கருதுகோளாக இருந்தது. அதாவது இரு தரப்பு இணைச் செயற்பாடுகளில் சில மாற்றங்களை சுவிஸ் மேற்கொள்ளவேண்டிய நிலை தோன்றியிருக்கும்.

முக்கியமாக பலராலும் பேசப்பட்ட (வெளிநாட்டவர் உட்பட) சுவிஸில் 10 மில்லியன் உச்சவரம்பு மக்கள் தொகைக்கான திட்ட வாக்கெடுப்பில்-ஆதரவாக 45%ம்,எதிராக 55% வாக்கும் கிடைத்து மக்கள் இக்கோரிக்கையை நிராகரித்துள்ளார்கள். இதனால் வெளிநாட்டவர் வருகை இனி தடைப்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டாவது சமூக குடிமை சேவைச் சட்ட (Civilian Service Act)

திருத்தத்தை அதாவது இராணுவ சேவையிலிருந்து சமூக சேவைக்கு மாறுவதை தடை செய்யும் கோரிக்கைக்கு மக்கள் 53% ம் ஆமோதித்து வாக்களித்துள்ளனர். மேலும் (Swiss Bern Musee des beaux& Arts) கலை அருங்காட்சியகம் 147 மில்லியன் செலவில் சீரமைப்புகுரிய கோரிக்கை மக்களால் நிராகரிப்பு செய்யப்பட்டு உள்ளது.

அத்துடன் ஜெனிவா கலை மற்றும் சரித்திர அருங்காட்சியகம் 131 மில்லியன் செலவில் விரிவாக்கம் செய்யும் கோரிக்கையையும் 54% மக்கள் எதிராக வாக்கு செலுத்தி நிராகரித்துள்ளனர். அதாவது

முதலாம் கோரிக்கை வெற்றி பெற்றிருப்பின் சுவிஸ் அரசு பல்துறை தொழிலாளர் நெருக்கடியை சந்திக்க வேண்டிய நிலையியல் தோற்றம் பெற்றிருக்கும் என ஊகிக்கப்படுகிறது.

## மூன்று முக்கிய பொதுவாக்கெடுப்பு

சுவிட்சர்லாந்தில் பொதுவாக்கெடுப்பு மூன்று முக்கிய சூழ்நிலைகளில் நடத்தப்படுகிறது. முதலாவது கட்டாய பொதுவாக்கெடுப்பு (Mandatory Referendum) அரசியலமைப்புத் திருத்தங்கள், சர்வதேச உடன்படிக்கைகளில் முக்கிய மாற்றங்கள் போன்ற விடயங்களில் மக்களின் ஒப்புதல் கட்டாயமாக பெறப்பட வேண்டும்.

இரண்டாவது விருப்பப் பொதுவாக்கெடுப்பு (Optional Referendum) நாடாளுமன்றம் ஒரு புதிய சட்டத்தை நிறைவேற்றிய பின்னர், 100 நாட்களுக்குள் 50,000 வாக்காளர்களின் கையெழுத்துகள் சேகரிக்கப்பட்டால் அந்தச் சட்டம் மக்களின் வாக்கெடுப்பிற்கு கொண்டு வரப்படும்.

மூன்றாவது மக்கள் முன்முயற்சி (Popular Initiative) 100,000 வாக்காளர்கள் கையெழுத்திட்டு ஒரு அரசியலமைப்புத் திருத்தத்தை முன்வைத்தால், அது தேசிய அளவிலான வாக்கெடுப்பிற்கு செல்லும். இதன் மூலம் சாதாரண குடிமக்களுக்குக்




கூட அரசியல் மாற்றங்களை முன்வைக்கும் அதிகாரம் கிடைக்கிறது.

சுவிட்சர்லாந்தில் ஆண்டுக்கு பல முறை பொதுவாக்கெடுப்புகள் நடைபெறுகின்றன. குடியேற்றக் கொள்கை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, ஓய்வூதியம், வரிவிதிப்பு, ஐரோப்பிய ஒன்றியத்துடனான உறவுகள் போன்ற பல்வேறு விடயங்களில் மக்கள் நேரடியாக முடிவெடுத்துள்ளனர்.

இந்த நடைமுறை அரசின் மீதான மக்களின் நம்பிக்கையை அதிகரிப்பதோடு, அரசியல் பொறுப்புணர்வையும் வலுப்படுத்துகிறது. அதே நேரத்தில், மக்கள் அரசியல் விவகாரங்களில் தொடர்ந்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய அவசியத்தையும் உருவாக்குகிறது.

## குடியேற்றம், தேசிய அடையாளம், பொருளாதார வளர்ச்சி:

முக்கியமாக தற்போது நடைபெற்ற பொது வாக்கெடுப்பில், பெரும்பான்மையான சுவிஸ் வாக்காளர்கள் சனத்தொகை எண்ணிக்கை கட்டுப்பாட்டு முன்மொழிவை நிராகரித்தனர். இதன் மூலம் மக்கள்தொகையை ஒரு நிர்ணயிக்கப்பட்ட எண்ணிக்கைக்குள் கட்டுப்படுத்தும் முயற்சிக்கு மக்கள் ஆதரவு இல்லை என்பது தெளிவானது. அதேவேளை, மக்கள்தொகை வளர்ச்சி மற்றும் குடியேற்றம் குறித்த கவலைகள் முற்றிலும் மறுக்கப்படவில்லை; மாறாக, அவற்றை சமநிலையான கொள்கைகள் மூலம் கையாள வேண்டும் என்ற அணுகுமுறையே வெற்றி பெற்றதாகக் கருதப்படுகிறது.

இந்தத் தீர்ப்பு சுவிட்சர்லாந்தின் நேரடி ஜனநாயக அமைப்பின் வலிமையையும் வெளிப்படுத்துகிறது. மக்கள் தங்களது எதிர்காலம் தொடர்பான முக்கிய முடிவுகளில் நேரடியாக பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும் வாய்ப்பைப் பெற்றனர். அதே நேரத்தில், பொருளாதாரத் தேவைகள், மனித வளப் பற்றாக்குறை மற்றும் சர்வதேச உறவுகள் ஆகியவற்றை கருத்தில் கொண்டு நடைமுறை சார்ந்த முடிவை எடுத்துள்ளனர்.

சுமார் பத்து மில்லியன் மக்களைக் கொண்ட சுவிட்சர்லாந்து, நேரடி ஜனநாயகத்தின் மூலம் உலகிற்கு ஒரு தனித்துவமான முன்மாதிரியை வழங்குகிறது. பொதுவாக்கெடுப்பு என்பது வெறும் வாக்குப்பதிவு முறை அல்ல; அது மக்களின் இறையாண்மையை நடைமுறையில் உறுதிப்படுத்தும் சக்திவாய்ந்த ஜனநாயக கருவியாகும். மக்கள் நேரடியாக முடிவெடுக்கும் இந்த அமைப்பு, அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான நம்பிக்கையை வலுப்படுத்துவதோடு, ஜனநாயகத்தின் உண்மையான அர்த்தத்தை வெளிப்படுத்துகிறது.

பத்து மில்லியன் மக்கள்தொகை உச்சவரம்பு குறித்த சுவிஸ் பொது வாக்கெடுப்பு வெறும் எண்ணிக்கையைப் பற்றிய விவாதமல்ல. அது குடியேற்றம், தேசிய அடையாளம், பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான வள மேலாண்மை ஆகியவற்றுக்கு இடையிலான சமநிலையைப் பற்றிய ஒரு முக்கிய அரசியல் சோதனையாக அமைந்தது. வாக்கெடுப்பின் முடிவு, சுவிட்சர்லாந்து திறந்த பொருளாதாரத்தையும் கட்டுப்படுத்தப்பட்ட ஆனால் தொடர்ச்சியான குடியேற்றக் கொள்கையையும் ஆதரிக்கும் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளது என்பதை வெளிப்படுத்துகிறது.



# உலகக் கோப்பை சாதனைக்காக சுவிஸ் அணிக்கு அரசியல் தலைவர்கள் பாராட்டு

உலகக் கோப்பை காலிறுதியில் அர்ஜென்டினாவிடம் தோல்வியடைந்து வெளியேறிய சுவிட்சர்லாந்து கால்பந்து அணிக்கு, நாட்டின் ஜனாதிபதி கி பார்மெலின் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் மார்டின் பிஸ்டர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

மறக்க முடியாத உணர்வுகளை வழங்கிய அனைவருக்கும் மிக்க நன்றி; அணியினருக்கு மிகப்பெரிய பாராட்டுகள் என பார்மெலின் சமூக ஊடகமான ஙீ-இல் பதிவிட்டார். தோல்வி ஏமாற்றமளித்தாலும், சுவிட்சர்லாந்து முழுவதையும் ஒன்றிணைத்த சிறப்பான அணியும் மறக்க முடியாத போட்டித் தொடருமே நினைவில் நிற்கும் என அவர் குறிப்பிட்டார். காலிறுதிக்கு முன்னேறியதன் மூலம் சுவிஸ் அணி நாட்டின் கால்பந்து வரலாற்றில் புதிய சாதனை படைத்துள்ளதாக விளையாட்டுத்துறை அமைச்சர் மார்டின் பிஸ்டர் தெரிவித்தார். இதற்காக அணிக்கு மிகுந்த மரியாதையும் நன்றியும் உரியது என்றும் அவர் கூறினார்.

கன்சாஸ் சிட்டியில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியை பிஸ்டர் நேரில் கண்டுகளித்தார். கூடுதல் நேரம் வரை நீடித்த போட்டியில் முராத் யாகின் தலைமையிலான சுவிஸ் அணி, நடப்பு உலகச் சாம்பியன் அர்ஜென்டினாவிடம் 1:3 என்ற கணக்கில் தோல்வியடைந்தது.

சுவிஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அணியைப் பாராட்டினர். எங்கள் தேசிய அணி உண்மையான வீரர்கள் என்றும், இந்த அற்புதமான உலகக் கோப்பை பயணத்திற்கு நன்றி என்றும் பலர் சமூக ஊடகங்களில் பதிவிட்டனர்.

# பிரெஞ்சு மொழிப் பகுதிகளில் வீட்டு விலைகள் வேகமாக உயர்வு

Raiffeisen வங்கியின் புதிய அறிக்கையின்படி, சுவிட்சர்லாந்தின் பிரெஞ்சு மொழி பேசும் பகுதிகளில் தனி வீடுகளின் விலைகள் நாட்டின் பிற பகுதிகளை விட இரு மடங்கு வேகத்தில் உயர்ந்து வருகின்றன.

குறிப்பாக லேக் ஜெனீவா (Lake Geneva) பிராந்தியத்தில் கட்டிட நிலங்களின் பற்றாக்குறை இதற்குக் காரணமாகக் கூறப்படுகிறது.

2025 ஆம் ஆண்டின் இரண்டாவது காலாண்டுடன் ஒப்பிடுகையில், பிரெஞ்சு மொழிப் பகுதிகளில் தனி வீடுகளின் விலை 6.3 சதவீதம் உயர்ந்துள்ளது.

அதே நேரத்தில் மத்திய மற்றும் வடமேற்கு சுவிட்சர்லாந்தில் இந்த உயர்வு சுமார் 3 சதவீதம் மட்டுமே பதிவாகியுள்ளது.




# எம்போலோ சிவப்பு அட்டை; நடுவர் முடிவை ஏற்க முடியாது என முராத் யாகின் கண்டனம்

உலகக் கோப்பை காலிறுதியில் அர்ஜென்டினாவிடம் கூடுதல் நேரத்தில் 1:3 என்ற கணக்கில் தோல்வியடைந்த சுவிட்சர்லாந்து போட்டித் தொடரிலிருந்து வெளியேறியது.

போட்டிக்குப் பிறகு பேசிய சுவிஸ் அணியின் பயிற்சியாளர் முராத் யாகின், தமது அணி எதிரணியைவிட சிறப்பாக விளையாடியதாகக் கூறினார். டான் என்டோயே சமநிலை கோல் அடித்த பிறகு போட்டியின் கட்டுப்பாடு சுவிட்சர்லாந்தின் பக்கம் இருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

ஆனால் VAR தலையீட்டுக்குப் பிறகு பிரீல் எம்போலோவுக்கு இரண்டாவது மஞ்சள் அட்டை காட்டப்பட்டு வெளியேற்றப்பட்டமை போட்டியின் திருப்புமுனையாக அமைந்தது. நடுவரின் தவறான முடிவுக்காக தமது அணி தண்டிக்கப்பட்டதாக கூறிய யாகின், அந்தத் தீர்ப்பை ஏற்றுக் கொள்ள முடியாது என விமர்சித்தார்.

ஒரு வீரர் குறைவாக இருந்தபோதும் சுவிஸ் அணி போராடியதாகவும், 112-வது நிமிடத்தில் ஹூலியன் அல்வாரெஸ் அடித்த கோல் அர்ஜென்டினாவுக்கு வெற்றியை உறுதிசெய்ததாகவும் அவர் கூறினார். தோல்வி வேதனை அளித்தாலும், காலிறுதி வரை முன்னேறி உலகச் சாம்பியனை கடுமையாக சவால் செய்த தனது வீரர்களைப் பற்றி பெருமைப்படுவதாக முராத் யாகின் தெரிவித்துள்ளார்.

# நிர்வாண உடல் சோதனை அவமானகரமானது பெண்ணுக்கு 1,000 CHF இழப்பீடு

லூசெர்ன்: 2020ஆம் ஆண்டு ஆர்ப்பாட்டத்தின் போது கைது செய்யப்பட்ட 65 வயது பெண்ணுக்கு போலீசார் மேற்கொண்ட நிர்வாண உடல் சோதனை தேவையற்றதும் அவமானகரமானதும் என சுவிட்சர்லாந்து கூட்டாட்சி உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இதற்காக அவருக்கு 1,000 சுவிஸ் ஃப்ராங்க் இழப்பீடு வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.




மேலும், 20 மணி நேரத்திற்கும் மேலாக காவலில் வைத்திருந்ததும் அளவுக்கு மீறிய நடவடிக்கையாக நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. இருப்பினும், அந்தப் பெண் அதிகாரிகளைத் தடுத்தது மற்றும் ஒரு பெண் போலீஸ் அதிகாரியை கடித்தது தொடர்பாக 2023ஆம் ஆண்டு குற்றவாளியாக அறிவிக்கப்பட்டிருந்தார்.



# சூரிசில் சாலைகளின் கீழ் புதைந்த 70 கிலோமீட்டர் நீரோடைகள்

## மீண்டும் வெளிக்கொணர திட்டம்

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகரில் சுமார் 70 கிலோமீட்டர் நீளமான இயற்கை நீரோடைகள், கடந்த கால நகர அபிவிருத்தி திட்டங்களால் சாலைகளின் கீழ் புதைக்கப்பட்டுள்ளன. தற்போது அவற்றில் சிலவற்றை மீண்டும் வெளிக்கொண்டு வர நகராட்சி நடவடிக்கை எடுத்து வருகிறது.

முதற்கட்டமாக, Riesbach பகுதியில் உள்ள ஏணிஹுணஞ்ஞிட நீரோடையின் ஒரு சிறிய பகுதியை மீண்டும் திறந்த வெளியில் ஓடச் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. இது நகரின் வெப்பத்தை குறைத்து, இயற்கை சூழலை மேம்படுத்தும் முயற்சியாக பார்க்கப்படுகிறது.

நகர்ப்புற இயக்கவியல் நிபுணர் தோமஸ் ஹுூக்-டி லேனா (Thomas Hug&Di Lena), இந்த முயற்சியை வரவேற்றுள்ளதுடன், குஞச்ஞீநுடேணிஹுநுண உள்ளிட்ட பல இடங்களிலும் இதுபோன்ற திட்டங்களை செயல்படுத்த முடியும் என்று தெரிவித்துள்ளார்.

அவரின் கூற்றுப்படி, ஙிணிடூஹுஞச்ஞிட, ஓடூணிண்ஞச்ஞிட, ஈ5டூஞண்ஞிடடிஞச்ஞிட போன்ற பல நீரோடைகள் இன்னும் சாலைகள், ரயில் பாதைகள் மற்றும் பிற போக்குவரத்து கட்டமைப்புகளின் கீழ் மறைந்தே ஓடுகின்றன. குறிப்பாக Stadelhofen பகுதியில் கார்கள் நிறைந்த வெப்பத் தீவு (Heat Island) உருவாகியுள்ள நிலையில், அதன் கீழே இயற்கை நீரோடை ஓடிக்கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையில், நெதர்லாந்தின் உட்ரெக்ட் (Utrecht) நகரம் இதற்கு ஒரு வெற்றிகரமான முன்னுதாரணமாகக் குறிப்பிடப்படுகிறது. அங்கு சாலை அமைப்பதற்காக மூடப்பட்டிருந்த பழமையான கால்வாய், பொதுமக்கள் ஆதரவுடன் மீண்டும் திறக்கப்பட்டு, 2020 முதல் இயற்கை நீரோட்டம் மீண்டும் தொடங்கியுள்ளது.

இதுபோன்ற திட்டங்கள் சூரிசிலும் விரிவுபடுத்தப்பட்டால், நகரின் வெப்பத்தை குறைப்பதோடு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மக்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்தும் என்று நிபுணர்கள் கருதுகின்றனர்.



# சூரிச் நகர எஸ்.பி.கட்சியில் இலவச மதுபானத் தடை நிராகரிப்பு

சுவிட்சர்லாந்தின் சூரிச் நகர சமூக ஜனநாயகக் கட்சி (SP), தனது கட்சி நிகழ்வுகளில் இலவசமாக பீர் மற்றும் வைன் வழங்கும் நடைமுறையை தொடர முடிவு செய்துள்ளது. இலவச மதுபான விநியோகத்தைத் தடை செய்ய வேண்டும் என்ற தீர்மானம், கட்சி உறுப்பினர்களின் வாக்கெடுப்பில் 82-35 என்ற வாக்கு வித்தியாசத்தில் நிராகரிக்கப்பட்டது.

இந்தத் தீர்மானத்தை, மதுபானப் பழக்கத்திலிருந்து மீண்டு வரும் கட்சி உறுப்பினர் பெஞ்சமின் கோபெல்ட் முன்வைத்தார். நிகழ்ச்சிகளில் தொடர்ந்து மதுபானம் இருப்பது தன்னைப் போன்றவர்களுக்கு சிரமத்தை ஏற்படுத்துவதாகவும், இலவசமாக வழங்குவதற்குப் பதிலாக வாங்க வேண்டிய நிலை இருந்தால் அது ஒரு கட்டுப்பாடாக அமையும் என்றும் அவர் வலியுறுத்தினார். மேலும், உறுப்பினர் கட்டணப் பணம் மதுபானத்திற்கு பயன்படுத்தப்படக் கூடாது என்றும் தெரிவித்தார். எனினும், கட்சித் தலைவர் ஒலிவர் ஹைம்கார்ட்னர், கட்சி நிகழ்வுகளில் அளவுக்கு மீறி மதுபானம் வழங்கப்படுவதில்லை என்றும், வெற்றிக் கொண்டாட்டங்கள் போன்ற சில நிகழ்வுகளில் மட்டுமே இலவச பானங்கள் வழங்கப்படுகின்றன என்றும் விளக்கினார். இருப்பினும், கட்சி நிகழ்வுகளை அனைவருக்கும் ஏற்ற வகையில் மேலும் உள்ளடக்கிய (inclusive) முறையில் நடத்துவது குறித்து ஆய்வு செய்ய ஒரு பணிக்குழுவை அமைக்கும் யோசனை ஏற்கப்பட்டது.

இதற்கிடையில், பசுமைக் கட்சி (Greens) இந்த விவாதத்தைப் புரிந்துகொள்ள முடியும் என்றாலும், மதுபானம் சமூக கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக இருப்பதால் முழுமையான தடை எதிர்ப்பைச் சந்திக்கும் எனக் கருத்து தெரிவித்தது. மத்தியக் கட்சி (Die Mitte), மதுபானம் அருந்துபவர்களும் அருந்தாதவர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும் என்றும், மதுபானமில்லா மாற்றுப் பானங்கள் எப்போதும் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறியது.

எப்.டி.பி. (FDP) கட்சித் தலைவர் 'எஸ்.பி. கட்சிக்கு இதைவிட பெரிய பிரச்சினைகள் இல்லாதது மகிழ்ச்சி' என்று கிண்டலாகக் கருத்து தெரிவித்தார். எஸ்.வி.பி. (SVP) கட்சி, மதுபானம் அருந்தலாமா வேண்டாமா என்பதை பெரியவர்கள் தாங்களே முடிவு செய்ய வேண்டும் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்தியது.



# கடும் வெப்பத்தில் சில மருந்துகள் ஆபத்தை அதிகரிக்கலாம்

## சுவிஸ் மருந்தாளர்கள் எச்சரிக்கை

சுவிட்சர்லாந்தில் நிலவும் கடும் வெப்ப அலை காரணமாக, சில வகை மருந்துகளை உட்கொள்பவர்கள் கூடுதல் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என்று சுவிஸ் மருந்தாளர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

லோசான் நகரில் உள்ள Unisant (University Center for General Medicine and Public Health) மருத்துவ மையத்தின் மருந்தாளர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பில், அதிக வெப்பநிலை சில மருந்துகளின் பக்கவிளைவுகளை அதிகரிக்கவோ அல்லது உடலின் வெப்பத்தைத் தாங்கும் திறனை குறைக்கவோ செய்யக்கூடும் என்று எச்சரித்துள்ளனர். குறிப்பாக முதியவர்கள் மற்றும் கர்ப்பிணிப் பெண்கள் அதிக ஆபத்தில் இருப்பினும், இந்த பாதிப்பு யாருக்கும் ஏற்படக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மருந்துகளின் தாக்கத்தால் உடலின் வெப்பநிலையை கட்டுப்படுத்தும் இயல்பு பாதிக்கப்படலாம். இதன் விளைவாக உடல் விரைவில் சோர்வடைவது, உடல் வெப்பநிலை அதிகரிப்பது, நீரிழப்பு ஏற்படுவது மற்றும் உடலில் உள்ள தாதுக்கள் குறைவது போன்ற பிரச்சினைகள் உருவாகலாம்.

சாதாரணமாக அதிகம் பயன்படுத்தப்படும் சில மருந்துகள்கூட இந்த ஆபத்தை ஏற்படுத்தக் கூடும். சிறுநீர் வெளியேற்றத்தை அதிகரிக்கும் ஈடிதணுஞுணுடிஞிண் மற்றும் மலமிளக்கும் Laxatives ஆகியவை நீரிழப்பை ஏற்படுத்தும். மனஅழுத்த நிவாரண மருந்துகள் (Antidepressants), நரம்பு தொடர்பான மருந்துகள் (Neuroleptics), ஓபியாய்ட் (Opioids) வகை வலிநிவாரணிகள் ஆகியவை உடலின் வெப்பநிலை கட்டுப்பாட்டை பாதிக்கலாம். மேலும், உயர் இரத்த அழுத்த மருந்துகள், பீட்டா-பிளாக்கர்கள் (Beta&blockers), இரத்தத்தை நீர்த்துப்போகச் செய்யும் மருந்துகள், தூக்க மாத்திரைகள் மற்றும் தசை தளர்த்தும் மருந்துகளையும் எடுத்துக்கொள்பவர்கள் கவனமாக இருக்க வேண்டும்.

இந்த மருந்துகளை தொடர்ந்து பயன்படுத்துபவர்கள் தாங்களாகவே மருந்தை நிறுத்தாமல், தேவையெனில் மருத்துவரை அணுகி மருந்தின் அளவு அல்லது எடுத்துக்கொள்ளும் இடைவெளியை தற்காலிகமாக மாற்ற வேண்டுமா என்பதை ஆலோசிக்க வேண்டும் என்று மருந்தாளர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

மேலும், நீரிழப்பு மருந்துகளின் செயல்பாட்டை பாதிக்கும் முக்கிய காரணிகளில் ஒன்றாக இருப்பதால், கோடை வெப்ப காலத்தில் போதுமான அளவு தண்ணீர் குடித்து உடலை எப்போதும் நீர்ச்சத்துடன் வைத்திருக்க வேண்டும் என்றும் அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.




# சூரிச்- வின்டர்தூர் இடையே இரவு நேர பேருந்து சேவையை சோதனை அறிமுகப்படுத்துகிறது சூரிச் போக்குவரத்து சங்கம்

சூரிச் போக்குவரத்து சங்கம் (ZVV), இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் பணிபுரியும் மக்களின் போக்குவரத்து தேவையை பூர்த்தி செய்யும் வகையில், சூரிச் மற்றும் வின்டர்தூர் இடையே வார நாட்களில் புதிய இரவு நேர பேருந்து சேவையை சோதனை அடிப்படையில் அறிமுகப்படுத்தவுள்ளது.

சூரிச் மாநில அரசின் தகவலின்படி, தற்போது பல சேவைகள் 24 மணி நேரமும், வாரத்தின் அனைத்து நாட்களிலும் இயங்குகின்றன. இதனால் மருத்துவமனைகள், தொழிற்சாலைகள், விமான நிலையம், சுத்திகரிப்பு சேவைகள், பாதுகாப்புத் துறை மற்றும் பிற அத்தியாவசிய பணிகளில் ஈடுபடும் ஆயிரக்கணக்கானோர் இரவு அல்லது அதிகாலை நேரங்களில் பணிக்குச் செல்ல வேண்டியுள்ளது. இதுவரை அந்த நேரங்களில் போதுமான பொதுப் போக்குவரத்து வசதி இல்லாததால், பலர் தனியார் கார் அல்லது பிற தனிப்பட்ட போக்குவரத்து வசதிகளை நம்பியிருந்தனர்.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வாக, ஙூஙங குறைக்கப்பட்ட இரவு நேர போக்குவரத்து வலையமைப்பை (Reduced Night Network) உருவாக்க திட்டமிட்டுள்ளது. அதன் முதல் கட்டமாக வின்டர்தூர்-சூரிச் இடையே கு-ஆச்டண ரயிலுக்கு பதிலாக இரவு நேர பேருந்து சேவை இயக்கப்படும்.

இந்தத் திட்டம் முதலில் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு, பயணிகளின் பயன்பாடு மற்றும் தேவையின் அடிப்படையில் பின்னர் நிரந்தர சேவையாக மாற்றுவது குறித்து முடிவு செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சுவிஸ் தொழில்நுட்பம்; செயற்கை நுண்ணறிவு மூலம் கழிவுகள் தானியங்கி வகைப்படுத்தல்

சுவிட்சர்லாந்தின் Lausanne சேர்ந்த WasteFlow என்ற ஸ்டார்ட்அப் நிறுவனம், கழிவுப் பொருட்களை துல்லியமாகப் பிரித்தறிய செயற்கை நுண்ணறிவு (AI) அடிப்படையிலான புதிய தொழில்நுட்பத்தை உருவாக்கியுள்ளது.

கேமரா மற்றும் உணரிகளின் உதவியுடன் இயங்கும் இந்த அமைப்பு, நிகழ்நேரத்தில் 66 வகையான கழிவுப் பொருட்களை அடையாளம் காண முடியும். குறிப்பாக கஉகூ போன்ற பிளாஸ்டிக் வகைகளை 98% வரை துல்லியமாகக் கண்டறிவதாக நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த தொழில்நுட்பம் மூலம் மறுசுழற்சி செய்யக் கூடிய பொருட்களின் மீட்பு சுமார் 6% வரை அதிகரிக்கும் என்றும், எரிக்கப்படும் கழிவுகளின் அளவு குறையும் என்றும் நிறுவனம் நம்புகிறது. எதிர்காலத்தில் அகச்சிவப்பு, வெப்பம் மற்றும் ஆழத் தரவுகளையும் பயன்படுத்தி ஆபத்தான அல்லது மறைந்துள்ள கழிவுகளையும் கண்டறியும் வகையில் இந்த அமைப்பு மேம்படுத்தப்பட உள்ளது.



# சுவிட்சர்லாந்துக்கு புதிதாக வருபவர்களுக்கான மருத்துவக் காப்பீடு தெரிந்துகொள்ள வேண்டிய முக்கிய தகவல்கள்

சுவிட்சர்லாந்துக்கு புதிதாக குடிபெயர்பவர்களுக்கு மருத்துவக் காப்பீட்டு (Health Insurance) முறை ஆரம்பத்தில் சிக்கலாகத் தோன்றலாம். ஆனால், அங்கு மருத்துவக் காப்பீடு சட்டப்படி கட்டாயமானது என்பதால், புதிய குடியேறிகள் சில முக்கிய விதிமுறைகளை அறிந்திருப்பது அவசியம்.

சுவிட்சர்லாந்துக்கு வந்த மூன்று மாதங்களுக்குள் அனைவரும் கட்டாய அடிப்படை மருத்துவக் காப்பீட்டில் (Basic Insurance) சேர வேண்டும். இந்தக் காப்பீடு நோய், விபத்து மற்றும் மகப்பேறு தொடர்பான மருத்துவச் செலவுகளை உள்ளடக்கும். இந்த அடிப்படை காப்பீட்டின் சேவைகள் சட்டத்தால் நிர்ணயிக்கப்பட்டவை என்பதால், எந்த காப்பீட்டு நிறுவனத்தைத் தேர்வு செய்தாலும் அடிப்படை பாதுகாப்பு ஒரே மாதிரியாக இருக்கும்.

இதற்கு மேலாக, விருப்பத்தின் அடிப்படையில் Supplementary Insurance எனப்படும் கூடுதல் காப்பீட்டையும் பெறலாம். இதன் மூலம் வெளிநாடுகளில் சிகிச்சை பெறுதல், உடற்பயிற்சி மைய (Fitness) செலவுகளுக்கான உதவி, மருத்துவமனைகளில் கூடுதல் வசதிகள் போன்ற பல சேவைகளைப் பெற முடியும்.

குடும்பத்தினர் அனைவரும் ஒரே காப்பீட்டு ஒப்பந்தத்தில் இணைந்தால், 10 சதவீதம் வரை குடும்ப தள்ளுபடியும் கிடைக்கும்.

புதிய குடியேறிகளுக்காக, உள்ளூர் நிர்வாகத்தில் பதிவு செய்வது முதல் பொருத்தமான மருத்துவக் காப்பீட்டைத் தேர்வு செய்வது வரை தேவையான வழிகாட்டுதல்கள், சரிபார்ப்புப் பட்டியல் (Checklist) மற்றும் நடைமுறை ஆலோசனைகள் அடங்கிய இலவச தகவல் கையேடுகளையும் சில காப்பீட்டு நிறுவனங்கள் வழங்குகின்றன. மருத்துவக் காப்பீட்டை முன்கூட்டியே திட்டமிட்டு தேர்வு செய்வதன் மூலம், சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவை பூர்த்தி செய்வதோடு, தங்களின் தேவைக்கும் செலவுத்திறனுக்கும் ஏற்ற காப்பீட்டு திட்டத்தை எளிதாகத் தேர்ந்தெடுக்க முடியும்.




# ஐரோப்பிய ஒன்றியத்தின் புதிய விமானப் பயணிகள் உரிமைகள்

## சுவிட்சர்லாந்தும் பாதிக்கப்படும்

ஐரோப்பிய ஒன்றியம் (EU) 2027 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து புதிய விமானப் பயணிகள் உரிமை விதிகளை அமல்படுத்தத் திட்டமிட்டுள்ளது. இந்த மாற்றங்கள் சுவிட்சர்லாந்திற்கும் பொருந்தும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிய விதிகளின்படி, குடும்பங்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கூடுதல் பாதுகாப்பு மற்றும் உரிமைகளைப் பெறுவதுடன், விமான தாமதம் அல்லது ரத்து செய்யப்பட்டால் பயணிகள் இழப்பீடு பெறும் நடைமுறையும் எளிமையாக்கப்படும்.

மேலும், விமான நிறுவனங்கள் பயணிகளுக்கு ஏற்பட்ட பிரச்சினைகள் குறித்து உடனடியாக தகவல் வழங்க வேண்டும். இழப்பீடுகள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் வழங்கப்பட வேண்டும். சில கூடுதல் கட்டணங்களை வசூலிப்பதற்கும் தடை விதிக்கப்படும்.

விமானம் குறைந்தது மூன்று மணி நேரம் தாமதமானால், பயணிகள் தொடர்ந்து இழப்பீடு பெறும் உரிமை கொண்டிருப்பார்கள். பயண தூரத்தின் அடிப்படையில் 250, 400 அல்லது 600 யூரோ வரை இழப்பீடு வழங்கப்படும்.

அதேபோல், புறப்படும் தேதிக்கு 14 நாட்களுக்குள் விமானம் ரத்து செய்யப்பட்டாலும் இந்த இழப்பீட்டு விதிகள் பொருந்தும். ஆனால், மோசமான வானிலை, இயற்கை அனர்த்தம், கட்டுப்படுத்த முடியாத வேலைநிறுத்தங்கள் அல்லது ஒழுங்கீனமாக நடக்கும் பயணிகள் காரணமாக ஏற்பட்ட தாமதங்களுக்கு விமான நிறுவனங்கள் பொறுப்பாகக் கருதப்படமாட்டாது.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான விமானப் போக்குவரத்து ஒப்பந்தத்தின் அடிப்படையில், சுவிட்சர்லாந்தும் இந்த புதிய விதிகளை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டியிருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மாட்டர்ஹோர்ன் மலையில் இரு மலையேற்ற வீரர்கள் உயிரிழப்பு



செர்மாட் (Zermatt): சுவிட்சர்லாந்தின் புகழ்பெற்ற மாட்டர்ஹோர்ன் (Matterhorn) மலையில் மலையேற்றத்தில் ஈடுபட்டிருந்த இரு வீரர்கள் ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளனர்.

வாலே (Valais) மாநில அரசுத் தரப்பு வழக்குரைஞர் அலுவலகம் வெளியிட்ட தகவலின்படி, சுமார் 4,030 மீட்டர் உயரத்தில் உள்ள ஹோர்ன்லிகிராட் (H5rnligrat) பாதை வழியாக இறங்கிக் கொண்டிருந்தபோது, இன்னும் தெரியாத காரணங்களால் இருவரும் ஆழமான பள்ளத்தில் விழுந்துள்ளனர்.

இந்த விபத்து காலை 11 மணியளவில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்பவத்தை கண்ட மூன்றாவது நபர் ஒருவர் மீட்புப் படையினருக்கு தகவல் வழங்கியதைத் தொடர்ந்து, ஏர் செர்மாட் (Air Zermatt) மீட்பு ஹெலிகாப்டர் சம்பவ இடத்திற்கு விரைந்தது.

எனினும், மீட்புக் குழுவினர் அங்கு சென்றபோது இருவரும் ஏற்கனவே உயிரிழந்திருந்ததாக உறுதிப்படுத்தப்பட்டது.

விபத்துக்கான காரணத்தை கண்டறிய வாலே மாநில அதிகாரிகள் விசாரணையை ஆரம்பித்துள்ளனர்.

# மாட்டர்ஹோர்ன் மலையேற்றம் ஆபத்தான நிலை

## மலையேற்ற வீரர்களுக்கு அவசர எச்சரிக்கை

செர்மாட்: சுவிட்சர்லாந்தின் புகழ்பெற்ற மாட்டர்ஹோர்ன் (Matterhorn) மலையில் தற்போது பாறைகள் சரிந்து விழும் அபாயம் மிகவும் அதிகரித்துள்ளதால், அனுபவமற்றவர்கள் மலையேற்றத்தைத் தவிர்க்குமாறு செர்மாட் மலையேற்ற வழிகாட்டிகள் அவசர எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வழக்கமாக கோடைக்காலத்திலும் மலையின் உயரமான பகுதிகளில் பனிப்படலம் காணப்படும். ஆனால் இந்த ஆண்டு நிலவும் கடுமையான வெப்பம் மற்றும் ஜூன் மாதம் முதல் மழையின்மை காரணமாக பனிப்படலம் பெருமளவில் உருகியுள்ளது.

செர்மாட் மீட்புப் பிரிவு தலைவரும் மலையேற்ற வழிகாட்டியுமான அஞ்சன் ட்ரூஃபர் கூறுகையில்,

மாட்டர்ஹோர்னை நன்கு அறியாதவர்கள் தற்போது அந்த மலையில் ஏறக் கூடாது. அது மிகவும் ஆபத்தானதாக மாறியுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

பனிப்பாதைகள் இல்லாததால் மலையேற்ற வீரர்கள் பாதுகாப்பான வழித்தடங்களை இழந்து பல திசைகளில் நகர்வதுடன், வெளிப்பட்டுள்ள பாறை மேற்பரப்புகளில் தளர்ந்த கற்கள் சரிந்து விழும் அபாயமும் அதிகரித்துள்ளது.

குறிப்பாக அனுபவமற்ற சிலர் நீளமான கயிறுகளை தவறாகப் பயன்படுத்துவதால் பெரிய பாறைகள் கீழே விழுந்து மற்ற மலையேற்ற வீரர்களின் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



கடந்த ஜூலை 7 ஆம் தேதி, பாறை சரிவில் சிக்கிய செக் குடியரசைச் சேர்ந்த மலையேற்ற வீரர் ஒருவர் உயிரிழந்த சம்பவமும் பதிவாகியுள்ளது.

இதையடுத்து, மாட்டர்ஹோர்ன் மலையை ஏறத் திட்டமிட்டுள்ளவர்கள் தற்போதைக்கு அந்த முயற்சியைத் தவிர்த்து, அப்பகுதியில் உள்ள பிற 4,000 மீட்டருக்கும் அதிக உயரமுள்ள பாதுகாப்பான சிகரங்களைத் தேர்வு செய்யுமாறு மலையேற்ற நிபுணர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.

# சூரிச் சுகாதார அமைப்பை மாற்ற சோசல்டெமோகிராடிக் கட்சி முயற்சி நகராட்சி கவுன்சிலில் விவாதம்

சூரிச் நகரில் சுகாதார சேவையில் நகராட்சியின் பங்கை அதிகரிக்க வேண்டும் என SP (சோசல் டெமோகிராடிக் கட்சி) கோரிக்கை விடுத்துள்ளது. இதன் ஒரு பகுதியாக, நகராட்சி நிர்வகிக்கும் வெளிநோயாளர் அவசர மருத்துவ மையங்கள் (stdtische Permanencen) அமைக்க வேண்டும் என்றும், மருத்துவர்களுக்கு நகராட்சி நேரடி சேவை ஒப்பந்தங்கள் வழங்க வேண்டும் என்றும் கட்சி முன்மொழிந்துள்ளது.

குக-யின் நோக்கம், பொதுமக்களுக்கு எளிதில் கிடைக்கும் மருத்துவ சேவையை உறுதி செய்வதும், அவசர சிகிச்சைப் பிரிவுகளில் ஏற்படும் அதிக நெரிசலை குறைப்பதும் ஆகும்.

மேலும், மனநல மருத்துவர்கள் மற்றும் உளவியல் நிபுணர்களுக்கான சேவைகளை விரிவுபடுத்த நகராட்சி ஒப்பந்தங்களை வழங்க வேண்டும், குடும்ப மருத்துவர்கள் மற்றும் குழந்தை மருத்துவர்களை ஊக்குவிக்க வேண்டும், நீண்டகால Public Health திட்டம் உருவாக்க வேண்டும் என்றும் குக கோரியுள்ளது. SP உறுப்பினர் பாஸ்கல் லாம்ப்ரெக்ட் கூறுகையில், ‘சுகாதாரச் செலவுகள் அதிகரிப்பை கட்டுப்படுத்தவும், இரு தரப்பட்ட மருத்துவ அமைப்பு உருவாகாமல் தடுக்கவும் இந்த நடவடிக்கைகள் அவசியம்’ என்றார்.

ஆனால், இந்த முன்மொழிவுகளுக்கு சில கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்தன. ஊஈக கட்சி, SP-யின் திட்டங்கள் பல பிரச்சினைகளை அடையாளம் காட்டினாலும், அவற்றுக்கான முழுமையான தீர்வை வழங்கவில்லை என்று விமர்சித்தது. அஃ கட்சியின் சூசன் விகெட், புதிய பொது மருத்துவ சேவைகளை உருவாக்கினாலும் போதுமான மருத்துவ பணியாளர்கள் இல்லாவிட்டால் பிரச்சினை தீராது என்றார்.

சுகாதாரப் பொறுப்பாளர் ஆண்ட்ரியாஸ் ஹௌரி (GLP), தற்போதைய சுகாதார அமைப்பு முழுமையாக தோல்வியடைந்ததாக இல்லை என்றும், முக்கிய பிரச்சினை மருத்துவ பணியாளர் பற்றாக்குறை என்றும் தெரிவித்தார். அதற்கு தீர்வாக அதிக பயிற்சி இடங்கள் தேவைப்படுகின்றன என்றார்.

இறுதியில், குக முன்வைத்த ஆறு கோரிக்கைகளில் நான்கு கோரிக்கைகள் மாற்றங்களுடன் ஏற்றுக்கொள்ளப்பட்டன. அவற்றுக்கு குக, பசுமைக் கட்சி, Die Mitte மற்றும் GLP ஆதரவு அளித்தன. ஆனால் இரண்டு கோரிக்கைகள் போதுமான ஆதரவு இல்லாமல் நிராகரிக்கப்பட்டன.

இந்த விவாதம், சூரிச் நகரில் அதிகரித்து வரும் சுகாதாரச் செலவுகள், மருத்துவ பணியாளர் பற்றாக்குறை மற்றும் முதியோர் எண்ணிக்கை அதிகரிப்பு போன்ற சவால்களை எதிர்கொள்ளும் முயற்சியின் ஒரு பகுதியாக பார்க்கப்படுகிறது.

# சூரிச் நகரத்துக்கு கடன் கட்டுப்பாடு தேவை FDP கட்சி முன்முயற்சி


சூரிச் நகரின் அதிகரித்து வரும் கடன் மற்றும் செலவுகளை கட்டுப்படுத்த FDP Stadt Zrich கட்சி, நகரத்திற்கான Schuldenbremse (கடன் வரம்பு விதி) அறிமுகப்படுத்தும் மக்கள் முன்முயற்சியை (Initiative) தொடங்கியுள்ளது.

FDP தலைவர் பெர்பரிம் அவ்திலி (P““rparim Avdili) கூறுகையில், நகர நிர்வாகம் செலவுகளை குறைப்பதாக அறிவித்தாலும் நடைமுறையில் பெரிய முதலீடுகளை தொடர்ந்து செய்து வருகிறது என்றார். குறிப்பாக, நகராட்சி வீடுகள் வாங்குவதற்காக 600 மில்லியன் ஃபிராங்க் ஒதுக்கிய திட்டத்தை அவர் விமர்சித்தார்.

சூரிச் நகரின் கடன் மற்றும் செலவுகள் வேகமாக அதிகரித்து வருவதாகவும், இதே நிலை தொடர்ந்தால் 2030க்குள் நிகரக் கடன் 16 பில்லியன் ஃபிராங்க் வரை உயரக்கூடும் என்றும் ஊஈக எச்சரிக்கிறது. இதனால் எதிர்காலத்தில் கல்வி, பாதுகாப்பு மற்றும் அடிப்படை சேவைகளுக்கான முதலீடுகள் பாதிக்கப்படலாம் என கட்சி கூறுகிறது.

FDP-யின் கருத்துப்படி, நகரின் சேமிப்பு நடவடிக்கைகளில் முக்கியமாக வீட்டு கொள்கை மறுபரிசீலனை செய்யப்பட வேண்டும். அதிக விலையில் சொத்துகளை வாங்குவது வீட்டு பிரச்சினைக்கு முழுமையான தீர்வாகாது என்றும், தனியார் துறையையும் இணைக்கும் புத்திசாலித்தனமான கொள்கை தேவை என்றும் அவ்திலி தெரிவித்துள்ளார். மேலும், புதிய பள்ளிக் கட்டிடங்கள், சைக்கிள் பாதை விரிவாக்கம் போன்ற நகர திட்டங்களில் செலவுகள் உண்மையில் பயனுள்ளதாக உள்ளதா என்பதை மீண்டும் ஆய்வு செய்ய வேண்டும் என்றும் அவர் கூறினார். FDP முன்மொழியும் கடன் கட்டுப்பாட்டின்படி, நகராட்சி கடனுக்கு ஒரு உச்ச வரம்பு நிர்ணயிக்க வேண்டும். அந்த வரம்பை மீறினால் முதலீடுகளை குறைப்பது போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

இத்திட்டத்திற்கு இடதுசாரி கட்சிகளிடையே எதிர்ப்பு இருக்கலாம் என்றாலும், வரி செலுத்துவோரின் நலனுக்காக நிதி ஒழுங்கு அவசியம் என்று ஊஈக வலியுறுத்துகிறது. குங்க கட்சியும் இதேபோன்ற கடன் கட்டுப்பாட்டு திட்டத்தை அறிவித்துள்ள நிலையில், ஊஈக மையக் கட்சிகள் மற்றும் எஃக உடன் இணைந்து பெரும்பான்மை ஆதரவைப் பெற முயற்சிக்கிறது.



சின்னத்தம்பி குருபரன்

# உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கான நீதியைப் பெற்றுக் கொடுப்பதில் அரசின் எதிர்காலம் தங்கியுள்ளது

தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைப்பதற்கு முன்பாக 2022, 2023, 2024 ஆண்டுகளில் நாடாளுமன்றத்திலும் பொது வெளிகளிலும் ஊழல், அதிகார துஸ்பிரயோகம் செய்தவர்களின் பல நூற்றுக் கணக்கான கோவைகள் தம்மிடம் இருப்பதாகவும், தாம் ஆட்சிக்கு வந்தால் அவர்களைச் சட்டத்தின்முன் நிறுத்திக் குற்றவாளிகளுக்கு உரிய தண்டனை வாங்கிக் கொடுப்போம், வெளிநாடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருக்கும் கறுப்புப் பணம் அனைத்தையும் நாட்டுக்குள் கொண்டு வருவோம், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகள், ஊடகவியலாளர்களின் படுகொலைகளுக்குக் காரணமானவர்களை இனங்கண்டு அவர்களுக்கும் தண்டனை பெற்றுக் கொடுப்போம் எனக் காட்டசாட்டமாக முழங்கினர். இதையே சனாதிபதித் தேர்தல், பொதுத் தேர்தல், உள்ளூராட்சி மன்றங்களுக்களுக்கான தேர்தல் பரப்புரைகளிலும் முன்வைத்து வந்தனர். ஆட்சி அமைத்துப் 18 மாதங்களைக் கடந்தி இருக்கின்றனர். அவர்கள் கூறியவற்றில் ஒரு சிலரைத் தவீர வேறு எவரும் சட்டத்தின்முன் நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுக்கப்படவில்லை என நாட்டு மக்களில் பலர் பேச ஆரம்பித்துவிட்டனர். இதில் பல மீன் குஞ்சுகள் அகப்பட பெரு முதலைகள் சவால் விட்டுக் கொண்டு சுதந்திரமாக நடமாடித் திரிகின்றனர்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல், ஊடகவியலாளர்களின் படுகொலைகள் (லசந்த விக்கிரமரத்தின, பிரதீப் எக்னெலிக்கொட, தராக்கி



சிவராம்), கிழக்குப் பல்கலைக்கழக மேனாள் உபவேந்தர் ரவிந்திரநாத், ரகர் வீரர் வஸீம் தாசுதீன் ஆகியோரின் விசாரணைகள் அனுமாரின் வாலைப்போல் நீண்டு கொண்டு செல்கின்றன. எதிர்க் கட்சிகளும் பொம்மலாட்டம் ஆடிச் சவால் விட்டுக் கொண்டிருக்கின்றனர். அவர்களில் அரசியல் கோமாளிகளான மேனாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில, சரத் வீரசேகர மௌபிம ஜனதா கட்சியின் தலைவர் திலித் ஜயவீர ஆகியோர் தொடர்புடைய சூத்திரதாரிகளைப் பாதுகாக்கவும் விசாரணைகளைத் திசை திருப்பவும் முன்னரங்கத்தில் நின்று ஆட ஆரம்பித்து விட்டனர்.

உயிர்த்த ஞாயிறு (Easter Sunday 2019 ஏப்ரல் 21) தாக்குதல் நடந்து ஏழு வருடங்கள் கடந்துவிட்டன. இலங்கையில் நடந்த தொடர் தற்கொலைத் தாக்குதல்களைக் கொண்ட, மிகக் கொடூரமான, நாட்டையே ஊலுக்கிவிட்ட, அதிர்ச்சியளித்த தாக்குதலாகக் கொள்ளப்படுகிறது.



கிறிஸ்தவர்கள் ஈஸ்டர் பண்டிகை ஆராதனைகளில் ஈடுபட்டிருந்த காலை வேளையில், புனித அந்தோனியார் திருத்தலம், கொச்சிக்கடை (கொழும்பு) புனித செபஸ்தியான் தேவாலயம், கட்டான (நீர்கொழும்பு) சீயோன் தேவாலயம், மட்டக்களப்பு ஆகிய மூன்று முக்கிய தேவாலயங்களிலும் கொழும்பிலுள்ள சாங்கிரி-லா (Shangri&-La), சினமன் கிராண்ட் (Cinnamon Grand), கிங்ஸ்பரி (The Kingsbury) ஆகிய மூன்று சொகுசு ஹோட்டல்கள், தெஹிவளை மிருகக்காட்சிச் சாலைக்கு அருகிலுள்ள ட்ரொப்பிகல் இன்★ (Tropical Inn) விடுதி அதனைத் தொடர்ந்து அன்றைய தினம் பிற்பகல் வேளையில் தெமட்டகொட பகுதியில் உள்ள ஒரு வீட்டு வளாகம் (பொலிஸார் சோதனையிடச் சென்றபோது) போன்ற இடங்களில் தற்கொலைத் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன. அதனைத் தொடர்ந்தும் மாலை வேளையில் இரு இடங்களில் குண்டுகள் வெடித்தன. சில தினங்களின் பின்னர் அம்பாறை மாவட்டம் சாய்ந்தமருதுப் பிரதேசத்தில் பொலிசாரின் சுற்றிவளைப்பின்போது இடம்பெற்ற மோதலிலும் தற்கொலைக் குண்டு வெடிப்பிலும் 12 தீவிரவாதிகள் உயிரிழந்தனர்.

உயிர்த்த ஞாயிறு அன்றைய தினம் நடந்த தற்கொலைக் குண்டுத் தொடர் தாக்குதலில் 269 பேர் உயிரிழந்தனர். இதில் 45 க்கும் மேற்பட்ட வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள், 40 க்கும் மேற்பட்ட குழந்தைகளும், 3 காவல்துறை அதிகாரிகளும் அடங்குவர். நீர்கொழும்பு தேவாலயத்திலேயே மிக அதிகமான இழப்புகள் ஏற்பட்டன. சுமார் 500 -க்கும் மேற்பட்டோர் கடுமையான மற்றும் சாதாரண காயங்களுக்கு உள்ளாகினர். 50 க்கு மேற்பட்டோர் பாதிக்கப்பட்டு நிரந்தர மாற்றுத் திறனாளிகளாக (Permanently Disabled) மாறினர். அத்தோடு நாட்டுக்குப பல பில்லியன் ரூபா பொருளாதார இழப்புக்கள் ஏற்பட்டன.

தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடந்து 2024 இறுதிவரை நடாத்தப்பட்ட காவல் துறையினர் மற்றும் புலனாய்வுத் துறையினரின் விசாரணைகள், சனாதிபதி ஆணைக் குழு விசாரணைகள், விசேட ஆணைக்குழு விசாரணைகள் யாவும் காட்டாப்புக் காட்டலுக்காகச் செய்யப்பட்டு அறிக்கைகள் வெளிவராமல் பல முக்கியமான தகவல்கள மறைக்கப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டன. இப்போது நடைபெறும் பெரும்பாலான விசாரணைகள் புதிதாகவே நடந்து கொண்டிருக்கின்றன. அதனால், தடயங்கள், ஆதாரங்களைக் கண்டுபிடிப்பதில் புலனாய்வுப் பிரிவினருக்குப் பலத்த சவாலாக அமைந்திருக்கின்றன. இவை அப்பட்டமாக சட்டத்துறை, நீதித்துறையின் பலவீனத்தை எடுத்துக் காட்டுவதாக ஆர்வமுடைய நாட்டு மக்கள் பலரும் கருத்துத் தெரிவிக்கின்றனர்.

மேனாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தனின் (பிள்ளையான்) அவரின் மேனாள் பிரத்தியேகச் செயலாளர் ஜனாப் அஷாத் மௌலானாவுடனான சனல் 4 (Channel 4, 2023) தொலைக்காட்சி நேர்காணலில் நல்லாட்சி அரசினை (2015-2019) வீழ்த்துவதற்கான சதித் திட்டமே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் என உண்மையைப் போட்டு உடைத்திருந்தார். 'பிள்ளையான் மட்டக்களப்புச் சறைச்சாலையில் கைதியாக இருந்தபோது அப்போதைய பாதுகாப்புப் பிரதானி ஓய்வு நிலை மேஜர் ஜெனரல் சுரேஷ் சலேயின் கீழிருந்து செயற்பட்ட புலனாய்வுப் பிரிவினர் இரு தடவை சந்தித்தாகவும், தானும் பிள்ளை



யானின் சகாக்கள் இருவரும் ஹபரணைக்குச் சென்று புலனாய்வு அலுவலகமொன்றில் சுரேஷ் சலேயைச் சந்தித்ததாகவும்' கூறியிருந்தார். இதன் உண்மைத் தன்மையைப் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்து நீதிமன்றத்தில் சான்றுகளுடன் வெளிப்படுத்தினாலே அத்தாக்குதலுக்குக் காரணமான சூத்திரதாரிகள் கைது செய்யப்பட்டு விடுவார்கள். இங்குதான் இடியப்பச் சிக்கல்கள் நிறைந்திருக்கின்றன. சாண் ஏற முழம் சறுக்குவது பொலான நிகழ்வுகளும் சவால்களும் எதிர்க் கட்சி அரசியல் கோமாளிகள், பௌத்த கடும்போக்குவாத பிக்குகள் சிலரின் அரங்கேற்றங்களும் விசாரணையைத் திசை திருப்ப எத்தனித்துக் கொண்டிருக்கின்றன.

கடந்த பெப்ரவரியில் (2026) கைதுசெய்யப்பட்டு பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டுவரும் சுரேஷ் சலேக்கு அநீதி இழைக்கப்பட்டதாகக் கூறி கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்துக்கு முன்னால் கூடாரம் அமைத்து அரசியல் கோமளிகள் தங்கள் அரசியல் இருப்பைத் தகவைத்துக் கொள்வதற்காகச் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டு, பொது மக்களின் எதிர்ப்பினால் இடைநடுவில் விட்டுச் சென்றனர்.

சுரேஷ் சலே குற்றமற்றவர் என்றால் உண்மையைக்கூறி விடுதலை பெற்றிருக்கலாம். அதைவிடுத்து மடிகணினி (Laptop), திறன் பேசி (Smart Phone) கடவுச் சொற்களை (Pass Word) ஏன் புலனாய்வுப் பிரிவினருக்குக் கொடுக்க மறுக்க வேண்டும். பொதுக்கள் பாதுகாப்ப அமைச்சர் 'சுரேஷ் சலே விசாரணைக்கு ஒத்துழைக்கவில்லை' எனக் கூறுகின்றார். உயர்த்த ஞாயிறு தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் சின்னா பின்னமாகித் துண்டு துண்டாகப் பொறுக்கி எடுத்த (உயிர் நீத்த) வித்துடலங்கள் யாவும் இந்நாட்டு மக்களுடையதல்லவா? அதேபொல் உல்லாசப் பயணிகள் மூலமான வருமானம் பாதிக்கப்பட்டமை, நீண்டநாள் ஊரங்குச் சட்டம், நீண்டதூரப் பயணங்களின்போது சோதனைச் சாவடிகளில் மக்கள் பட்ட அவலங்கள், இஸ்லாமிய சகோதரர்களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகள், பொது முடக்கத்தினால் உள்நாட்டு உற்பத்தி பாதிக்கப்பட்டமை, பொருளாதாரத்தில் ஏற்பட்ட பல பில்லியன் கணக்கான இழப்புக்கள், காயப்பட்டவர்கள், அங்கவீனமானவர்கள், தாய், தந்தையர், பிள்ளைகள், உறவினர்களை இழந்தவர்களுக்கு இந்த அரசியல் கோமாளிகளும், பொதுசனப் பேரமுனவைச் சேர்ந்தவர்களும் என்ன பொறுப்புக் கூறப் போகின்றனர். இங்கு பொறுப்பக் கூறல் என்பது அத்தாக்குதலுக்குக் காரணமான சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்து சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுப்பதிலேயே தங்கயுள்ளது. இது தேசிய மக்கள் சக்தி அரசின் தார்மீகக் கடமையுமாகும்.

பத்தோடு பாதினொன்றாக இதுவும் ஒன்று எனக் கடந்து பொகாமல் சம்பந்தப்பட்ட சூத்திரதாரிகளுக்கு 'வயிற்றில் புளியைக் கரைப்பது போல்' அவர்கள் விசாரணைகளில் விலத்திச் செல்லாதவாறு அவர்களுக்குப் பயத்தைக் காட்ட வேண்டும். ஏனெனில் நடந்திருக்கும் தாக்குதலானது மனித குலத்துக்கு எதிரான கர்ண கொடூரமானது. சட்டம் எவருக்கும் சமமானது, பொதுவானது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் குற்றவாளிகள் எத்தரத்தில் இருந்தாலும் சட்டத்தின்முன நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுக்க வேண்டும். இதில் அரசுக்கு எதிராக எத்தகைய சவால்கள், எதிர்ப்புக்கள், அச்சுறுத்தல்கள் நேர்ந்தாலும் அதற்கு இடம் கொடுக்காது, 'பனங்காட்டு நரி சலசலப்பு அஞ்சாது' என்ற உறுதியோடு, அஞ்சாமல் செயற்பட வேண்டும். இதுவே மக்களின் எதிர்பார்ப்பையும் நம்பிக்கையையும் கட்டி எழுப்புவதற்கான வழியாக அமையும்.

பட்டலந்த சித்திரவதை முகாம், யாழ்ப்பாணம் பொது நூலக எரிப்பு, இறுதி யுத்த மீறல்கள், படுகொலைகள், காணாமல் ஆக்


கப்பட்டோர் விவகாரம். அரசியல் கைதிகள் விவகாரம், மனிதப் புதை குழிகள் விலகாரம், ஊடகவியலாளர்களின் படு கொலைகள், யுத்தகாலத்தல் அரச படைகளால் கையகப்படுத்தப்பட்ட தனியாரின் காணி விவகாரம் என்பன தொடர்பான விசாரணையும் பொறுப்புக் கூறலும், குற்றவாளிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுத்தலும் நிவாரணம் வழங்கலும் அகிய பொறுப்பும் கடமையும் அரசுக்கு இருக்கிறது. அதனைப் பக்கச் சார்பின்றிச் நிறைவேற்றிக் காட்ட வேண்டும்.

அரசியல் கோமாளிகளும் எதிர்க் கட்சியினர் சிலரும் ராஜபக்சாக்களும் கூறுவது போல் சுரேஷ் சலே இறுதி யுத்தத்தின் போது களமுனையில் பிரதானமாகப் பணியாற்றியவர் அல்லர், என்பதை அப்போதைய முப்படைகளில் பிரதானி சரத் பொன்சேகா இருமுறை ஊடக சந்திப்புக்களில் கூறியிருக்கின்றார். அவ்வாறெனில் இவர்கள் ஏன்? எதற்காக? சுரேஷ் சலேயைப் பாதுகாக்க முனைகின்றனர். இதற்குப் பின்னால் இருந்து இவர்களை வழி நடத்துபவர்கள் யார்? ராஜபக்சாக்களா என்பது நாட்டு மக்கள் பலருக்குத் தெரியும். இருந்தும் மௌனம் சாதிக்கின்றனர். 'முழுப் பூசணிக் காயை சோற்றுள்' எத்தனை நாளைக்கு மறைத்து வைக்க முடியும். என்றோ ஒருநாள் வெளிவந்தே தீரும்.

தேசிய மக்கள் சக்தி அரசு தமக்கிருக்கும் பொருளாதார நெருக்கடிகளை ஓரளவு தீர்த்துக் கொள்வதற்கு ராஜபக்சாக்களின் ஆட்சிக் காலத்தில் 'ஊரை அடித்து உலையில் போட்டது போல்' மக்கள் பணத்தை மாசடி செய்து திருடிச் சூறையாடி, ஏப்பம் விட்டுப் பதுக்கி வைத்திருக்கும் பணத்தை வெளிக் கொணர்ந்தாலே போதும். அத்தோடு ஊழல், மேசடி, அதிகார துஷ்பிரயோகம் செய்து 'கண்ணாமூச்சி விளையாடிக்' கொண்டிருக்கும் அரசியல்வாதிகளைக் கைது செய்து, குற்றத்தை நிருபித்து உரிய தண்டனை வாங்கிக் கொடுபதும் அரசினதும் நீதித் துறையினதும் கடமையாகும். இதற்காக மாவட்டங்கள் அல்லது மாகாணங்கள் தோறும் சிறப்பு நீதிமன்றங்களைத் தாபித்துக் குற்றவாளிகளுக்கு விரைவாகத் தண்டனையை வாங்கிக் கொடுக்கலாம். இதன் மூலம் பக்கச் சாரபற்ற சட்டத்தின் ஆட்சி நிலவுகிறது என்பதை நிருபிப்பதொடு மக்கள் மனங்களில் நல்லபிராயத்தையும் ஏற்படுத்தலாம்.

ஏது எப்படி இருந்த போதிலும் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் சூத்திரதாரிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுப்பதென்பது அரசுக்கு மிகப் பெரிய சவாலான காரியமாகும். ஏனெனில் இதில் உயர் அரசியல்வாதிகள், இன்னும் சில அரசியல்வாதிகள், முப்படையினர், காவல் துறையினர், உயர் அதிகாரிகள் பலரும் சம்பத்பட்டிருப்பதனை ஊகிக்க முடிகிறது. இதுவே புத்திசீவிகளின் அபிப்பிராயமுமாகும். அவர்களுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கும்போது சிலவேளை சர்வதேச பீதியாக நாட்டுக்கு அவப் பெயரை ஏற்படுத்தலாம். அவ்வாறு அவப்பெயர் ஏற்பட்டால் அதனை ராஸபக்சாக்களும், அரசியல் கோமாளிகளும், எதிர்க் கட்சியினரும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தி அரசுக்கு ஆட்சியாளர்கள்மீது அவப்பெயரை ஏற்படுத்தி அரசை வீழ்த்த முயற்சிக்கலாம்.

அதேபொல், தாக்குதல் சூத்திரதாரிகளுக்குத் தண்டனை வாங்கிக் கொடுக்கத் தவறினால், சுற்றவாளிகளைத் திட்டமிட்டுக் குற்றவாளிகளாக்கிப் பழிதீர்க்க முயற்சித்ததாகக் கூறி, அதனை மிகப் பெரிய பிரச்சாரமாகப் பயன்படுத்தி அரசுக்கு எதிரான கலவரங்களையும் போராட்டங்களையும் ஊர்வலங்கள், சத்தியாக் கிரகங்கள், எதிர்ப்புக்ளையும் தூண்டி விடலாம். அத்தனை கொடூரமான தாக்குதலைத் திட்டமிட்டு நடத்தியவர்களுக்கு இது பெரிய விடயமாக அமையாது. இது கூத்தாடிக்குக் கொண்டாட்டமாகவும் அமைந்துவிடும். ஆகையினால் அரசு அவசரப்பட்டு 'எடுத்தோம் கவிழ்த்தோம்' என்றில்லாமல் மிகத் துல்லியமாக சூத்திரதாரிகளைக் கண்டுபிடித்துச் சட்டத்தின்முன் நிறுத்தித் தண்டனை வாங்கிக் கொடுப்பதே சிறந்த சாதுரியமாகும்.



பல நெருக்கடிகளுக்கு உள்ளாகி இருக்கும் அரசின்மீது பொருளாதார நெருக்கடி, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பவற்றால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்கள் கொஞ்சம் கொஞ்சமாக அரசின் மீதான நம்பிக்கையை இழந்துவரும் சந்தர்ப்பத்தில் இதுவும் எதிரான விளைவுகளை ஏற்படுத்திவிட்டால் அரசுக்குப் பாரிய சவாலாக அமைந்துவிடும். ஆகையினால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான விடயத்தில் புத்திசாலித்தனமாகச் செயற்பட்டுத் தண்டனை வாங்கிக் கொடுப்பது சிறந்ததாகும்.



# கதிர்காம பாதயாத்திரை பக்தர்களுக்காக 24 மணி நேர மருத்துவ சேவை

2026 ஆம் ஆண்டுக்கான ஆடி (ஏசல) பெரஹெரா மகோற்சவத்தை முன்னிட்டு பாதயாத்திரையாக கதிர்காமம் நோக்கி வரும் பக்தர்களின் உடல்நலம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், யால வலயம்-2 இல் உள்ளலின் துண பகுதியில் 24 மணி நேர மருத்துவ சேவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மருத்துவர் அழகையா லதாகரன் தலைமையில் ஐந்து பேர் கொண்ட மருத்துவக் குழு தொடர்ந்து பணியாற்றி வருவதுடன், அவசர சிகிச்சை மையமும் அங்கு நிறுவப்பட்டுள்ளது. இதன் மூலம் பாதயாத்திரை பக்தர்களுக்கு உடனடி மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன.

இந்த மருத்துவ முகாமை ருஹுணு மாகம்பத்து பிரதான சங்கநாயகர், ஹம்பாந்தோட்டை மாவட்ட சங்க சபை மற்றும் கதிர்காம சாசன பாதுகாப்பு மன்றத்தின் தலைவர், ஹெல போதுப் பல அமைப்பின் தலைவர், கதிர்காம புராதன கிரி விஹாரை மற்றும் வரலாற்றுச் சிறப்புமிக்க கதிர்காம கிரிவெஹெர ராஜமகா விகாரை உள்ளிட்ட நான்கு பிரதான விகாரைகளின் அதிபருமான அத்திபூஜ்ய கொபவக தம்மிந்த நாயக்க தேரர் அவர்கள் பார்வையிட்டார்.

இதன்போது மருத்துவக் குழுவினருக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டன. நிகழ்வில் கதிர்காம கிரிவெஹெர ராஜமகா விகாரையின் இல்லற அறங்காவலர் சசிக பம்பரெந்த, கதிர்காம பிரதேச சபைத் தலைவர் எச். எம். டி. ஹேரத், கதிரபுர ஜீப் வாகன சங்கத் தலைவர் வசந்த பிரியதர்ஷனஉள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.








# மட்டக்களப்பு பேருந்து நிலையத்தில் குடிநீர் மற்றும் மலசலகூட வசதிகள் இல்லாததால் பொதுமக்கள் பெரும் விசனம்

மட்டக்களப்பு பிரதான பேருந்து நிலையத்திலிருந்து கதிர்காமம் செல்லும் பக்தர்களுக்கு குடிநீர் மற்றும் மலசலகூட சுகாதார வசதிகள் இல்லாததால் பொதுமக்கள் பெரும் விசனம் அடைந்துள்ளனர்.

கதிர்காமக் கந்தனின் வருடாந்த உற்சவக் கொடியேற்றத் திருவிழா எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள நிலையில், மட்டக்களப்பிலிருந்து உகந்தை மலை முருகன் கோவிலுக்கு கடந்த இரு தினங்களாக தினமும் காலையில் 15க்கும் மேற்பட்ட அரச மற்றும் தனியார் பேருந்துகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டு வருகின்றன.

இருப்பினும், மட்டக்களப்பு மாநகர சபையினால் பராமரிக்கப்படும் இந்தப் பேருந்து நிலையத்தில் முறையான மலசலகூட மற்றும் குடிநீர் வசதிகள் இல்லாததால் பொதுமக்கள், அடியார்கள் மற்றும் போக்குவரத்து ஊழியர்கள் பல சுகாதாரப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

இது குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருக்குப் பல முறை தெரிவிக்கப்பட்ட போதிலும், இதுவரை எந்தவொரு நிரந்தர தீர்வும் எட்டப்படவில்லை.

இன்று தமது பயணங்களை மேற்கொண்ட ஓட்டுநர்கள், நடத்துநர்கள், அடியார்கள், முதியவர்கள், சிறுவர்கள் எனப் பலரும் இந்த அத்தியாவசியத் தேவைகள் இன்றி மிகுந்த அசௌகரியங்களை எதிர்கொண்டனர்.

எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாகத் தலையிட்டு, இப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வை பெற்றுத்தர வேண்டும் எனப் பயணிகள், அடியார்கள் மற்றும் ஓட்டுநர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





# குன்று தோறாடும் குமரனை தரிசிக்க
# கதிர்காமத்திற்கான கானக பாதயாத்திரை!


விபுலமாமணி வித்தகர்
வி.ரி.சகாதேவராஜா
(ஒருங்கிணைப்பாளர் - யாழ்.சந்நதி - கதிர்காமம் பாதயாத்திரைக்குழு.




குன்று தோறாடும் குமரனை தரிசிக்க கதிர்காமத்திற்கான 2026 ஆம் ஆண்டுக்கான கானக பாத யாத்திரை வெள்ளியன்று ஆரம்பமானது.

கிழக்கின் தென்கோடியிலுள்ள வரலாற்றுப்பிரசித்திபெற்ற உகந்தமலை ஸ்ரீ முருகனாலயத்திலிருந்து கதிர்காமத்திற்கு காட்டுப்பாதை ஊடாக 15ஆயிரத்து 896 அடியார்கள் காட்டுக்குள் இறங்கினர்.

2000 வருடகால வரலாற்றில் இத்துணை அதிகளவான அடியார்கள் முதல் நாள் பயணித்தமை இதுவே முதல் முறையாகும்.

ஆலய பிரதம குரு சிவஸ்ரீ சீதாராம் குருக்கள் முன்னிலையில் வண்ணக்கர் சுதா சகிதம் திறந்து வைக்கப்பட்டது.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான மஞ்சுள, பிரியந்த, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ.ஜெக ராஜன் கிழக்கு மாகாண கலாச்சார பண்பாடு துறை பணிப்பாளர் திருமதி மேனகா புவிக்குமார் தவிசாளர்கள்உள்ளிட்ட பிரமுகர்களும் கலந்து கொண்டார்கள்

எங்கு பார்த்தாலும் அடியார்கள் மயம்.

சில மடங்களும் நிரம்பி மரங்களின் கீழ் அநாயாசமாக அவர்கள் நேற்றும் ஓய்வெடுத்தனர். அதேவேளை பஸ்களிலும் நடந்தும் ஆயிரமாயிரம் அடியார்கள் வந்திறங்கிய வண்ணம் உள்ளனர்.

வரலாற்று பிரசித்தி பெற்ற கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிவேல் விழா மகோற்சவம் யூலை மாதம் 15ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கி 30 ஆம் தேதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவடையவுள்ளது.

அதனை முன்னிட்டு உகந்தை முருகன் ஆலயத்தில் இருந்து பிரதம குரு சிவ ஸ்ரீ க.கு. சீதாராம் குருக்களின் விசேட அதிகாலை பூஜையுடன் கதிர்காம காட்டுப்பாதை திறக்கபட்டது.

15 தினங்கள் இப் பாதை திறக்கப்பட்டு 24 ஆம் திகதி பூட்டப்படும். தினமும் காலை 6 மணி முதல் மாலை 6 மணிவரை பாதயாத்திரை மேற்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உகந்தையில் இருந்து காட்டுக்குள்ளே குமண, கிணற்றடி, குமுக்கன் ஆறு,வெட்டை, உப்பாறு, நாவலடி, வியாள, வள்ளியம்மன் ஆறு பாலம், கட்டகாமம், வீரச்சோலை வழியாக கதிர்காமத்தை அடைந்து இறையருள் முழுமை பெறும் பயணம்.

மனதுக்கு அமைதி தரும் பயணம். பல்லாயிரம் பேர் வாழ்க்கையில் தெய்வீக மாற்றத்தை முருகபெருமானே நேரடியாக வந்து வழிநடத்தும் பயணம். குறைந்தது ஆறு நாட்கள் பயணிப்பது வழமை. முருகப் பெருமானின் வழித்தடத்தை ஒற்றி, அகத்தியர், புலத்தியர், காசியப்ப முனிவர், கபில முனிவர், போகர், பாபாஜி, கோரக்கர், அருணகிரிநாதர், யோகர் சுவாமிகள் உட்பட பல சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், ஞானிகளும் நடந்து வந்த பாதையில் எமது பாதங்களையும் பதித்து குமனை, யாளை, கட்டகாமம் ஆகிய காடுகளை கடந்து, ஆறு நாட்களாக பாத யாத்திரை சென்று கதிர்காம கந்தனை தரிசிகின்றனர்.

இப்புனித பாதயாத்திரையில் இலங்கையில் உள்ள பல பகுதிகளிலும் இருந்து சுமார் 40,000 பக்தர்கள் கலந்து கொள்கின்றனர். எனினும் அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இரண்டு மாவட்டங்



களிலும் இருந்தே அதிகளவான யாத்திரீகர்கள் பாதயாத்திரையாக வருகின்றனர். இவ்விரு மாவட்டங்களிலும் இருந்து 80 சதவீத பக்தர்கள் புனித யாத்திரை வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2000 வருட பாரம்பரியமிக்க இந்த புனித பாத யாத்திரையானது ஆன்மீக பயணம் என்பதையும் தாண்டி வாழ்க்கையில் ஒரு புதிய பரிமாணத்திற்கே நம்மை கூட்டி செல்கிறது.

இந்தக் கதிர்காம பாதயாத்திரை, தீராத இன்னல்களையும், சொல்லொணா துயரங்களையும், பாரிய பிரச்சினைகளையும் வேண்டுதல்கள் மூலம் தீர்க்கும் அற்புதமான களமாகும்.

தீராத நோய் நொடிகள் தீர அருள் வேண்டி, குழந்தை வரம் வேண்டி, திருமண வரன் வேண்டி, நிம்மதியான வாழ்க்கை வேண்டி, மன நிம்மதி வேண்டி, கல்வி வேண்டி, தொழில் வேண்டி, பதவி உயர்வு வேண்டி, செல்வம் வேண்டி, வீடு வேண்டி, வெளிநாட்டு பயணம் வேண்டி இப்படி எத்தனையோ வேண்டுதல்களை மனம் உருகி முருகப்பெருமானிடம் கேட்கும் களம் இது.

பக்தர்களின் பலவிதமான நேர்த்திக்கடன்களை நிறைவு செய்யும் பாதை இது.

தனது தீராத நோய் தீர்ந்த மகிழ்ச்சியுடன் வயோதிபர்கள், தனக்கு பல ஆண்டுகளின் பின் பிள்ளை வரம் கிடைத்த பெருமிதத்தில் கைக்குழந்தையுடன் தாய்மார்கள், தடைப்பட்ட திருமணம் நிறைவேறிய நிலையில் ஆனந்தத்துடன் இளம் தம்பதிகள், குடும்ப பிரச்சினைகள் தீர்ந்த மன நிம்மதியுடன் பெரியவர்கள், மகளைக் கரையேற்றிய பேரானந்தத்துடன் பெற்றோர்கள், பயீட்சையில் சித்தியடைந்த குதூகலத்துடன் மாணவர்கள், வெளிநாட்டுப் பயணம் கைகூடிய நிலையில், தொழில் கிடைத்த உற்சாகத்துடன் இளைஞர்கள் இப்படி எத்தனையோ விடயங்களைத் தாங்கி செல்லும் பாதை இது.

இவை மட்டுமா? ஆன்மீக பயணம், பக்தி வழிபாடு என்பதையும் தாண்டி இன்னும் பல விடயங்கள் இப்பாதயாத்திரையில் உள்ளன.

ஏழை, பணக்காரன், உயர்ந்தோர், தாழ்ந்தோர், படித்தவன், படிக்காதவன், தொழிலாளி, முதலாளி என்ற பேதமின்மை, ஏராளமான புதிய நண்பர்களின் அறிமுகம், ஒன்றாக இருந்து உணவு உண்ணுதல், அனைவருக்கும் பகிர்ந்தளித்து உண்ணுதல், ஒருவருக்கு ஒருவர் உதவி செய்யும் மனப்பான்மை, உடல் சுகாதாரம், எளிமை, ஒற்றுமை, கூட்டுப் பிரார்த்தனை, பஜனை வழிபாடு என பல நன்மை பயக்கும் விடயங்களை இந்த பாதயாத்திரை நமக்குக் கொடுக்கிறது.

காட்டுக்குள் இறங்கி விட்டால் அனைவரது சுய நாமங்கள் மறந்து 'சாமி' என அழைக்கப்படுவது மற்றுமொரு மரபாகும்

இவை மட்டுமல்ல! இன்னும் பலவற்றை நாம் பார்த்து, கேட்டு, ரசித்து, உணர்ந்து. அனுபவித்துச் செல்கிறோம். காடு, ஆறு, குளம், களப்பு, வெளி, மலை, சேறு, மணல், தென்றல், கூதல் காற்று, கச்சான்காற்று, மழை, சுட்டெரிக்கும் வெயில், பனி இப்படி இயற்கை நமக்களித்த கோடை இங்கே கொட்டிக் கிடக்கிறது.

அழகிய மலைகள், வெளிகள், காடுகளைப் பார்த்து ரசித்து, காட்டு மூலிகைகளைத் தழுவி வரும் ஆறுகளில் குளித்து, சுத்தமான நல்ல காற்றை சுவாசித்து, மூலிகைகள் நிறைந்த காற்றை உடலில் படச் செய்து, புல் தரைகளிலே, ஆற்று மணலிலே, மரங்களின் கீழே படுத்து உறங்கி, காட்டிலே தேவாமிர்தமாகக் கிடைத்த உணவை அளவாக உண்டு மகிழ்ந்து, பறவைகளின் கீச்சொலிகளைக் கேட்டு, இறைவனின் நாமத்தை எந்நேரமும் உச்சரித்து, இந்த உணர்வுகளை எல்லாம் அனுபவித்து, அசைபோட்டு... அப்பப்பா! எத்தனை மனநிறைவான விடயங்கள். நாம் வாழும் சூழலில், நகரத்தில் எள்ளளவும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத அத்தனையும் இந்த பாதயாத்திரை மூலம் நமக்குக் கிடைக்கிறது.

பணமும், பதவியும், புகழும், சுகமும் மட்டுமா வாழ்க்கை? அதை விட நாம் பெற வேண்டியவை எத்தனையோ உள்ளன என்பதை உணர்த்தும் யாத்திரை இது.

போலியாக, நிழலாக வாழும் எமக்கு உண்மையை, நிஜத்தைக் காட்டும் இந்தப் பாத யாத்திரையின் பேரானந்தத்தை அனுபவிக்க வேண்டுமென்றால் கதிர்காமத்திற்கு ஒரு முறையாவது பாதயாத்திரை செல்ல வேண்டும்.

மொத்தத்தில் ஒரே வார்த்தையில் சொன்னால் முருக பெருமானே நேரடியாக பயணத்தில் அனைவரையும் அழைத்து செல்கிறான். இது மட்டும் உண்மை.



# திருகோணமலையில் எழுச்சியுடன் நடைபெற்ற நினைவேந்தல்

மக்கள் உரிமை, நீதி, சமத்துவம் மற்றும் அமைதிக்காகத் தன் வாழ்நாளெல்லாம் அர்ப்பணிப்புடன் வாழ்ந்து மறைந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் தலைவரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பெருந்தலைவருமான அமரர் இரா. சம்பந்தன் அவர்களின் இரண்டாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு இன்று திருகோணமலை மாநகர சபை மண்டபத்தில் மிக எழுச்சியாகவும் உணர்வு பூர்வமாகவும் நடைபெற்றது.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில், கட்சியின் தலைவர் சி வி கே சிவஞானம், பொதுச் செயலாளர் சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், மாநகர சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் உள்ளிட்ட அரசியல் தலைவர்களும் பெருந்திரளான பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் தொடக்கத்தில், மறைந்த பெருந்தலைவர் அமரர் இரா. சம்பந்தன் ஐயா அவர்களின் திருவுருவப் படத்திற்கு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டு, மலர் தூவி மிக உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்தப்பட்டது. கட்சியின் தலைவர், பொதுச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் (மாநகர சபை மற்றும் பிரதேச சபை) பிரதிநிதிகள் அனைவரும் மலர் அஞ்சலி செலுத்தியதுடன்இ ஐயாவின் வரலாற்றுச் சிறப்புமிக்க அரசியல் பங்களிப்பினை நன்றியுடன் நினைவுகூர்ந்தனர். 'அவர் விழைத்த ஒற்றுமைஇ நீதி மற்றும் ஜனநாயகப் பாதை என்றும் எம் நினைவில் நிலைத்திருக்கும்' அவர் காட்டிச் சென்ற நேர்மையானஇ ஜனநாயக வழியிலான அரசியல் பாதையில் தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுக்கும் வரை ஒன்றிணைந்து பயணிக்க வேண்டும் என்றும் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், மாவட்ட அமைப்பாளர்கள், சிவில் சமூகப் பிரதிநிதிகள் மற்றும் பெருந்திரளான திருகோணமலை மாவட்டப் பொதுமக்கள் எனப் பலரும் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்தியமை குறிப்பிடத்தக்கது.





# பத்மநாபா சவால் கிண்ணத்தை முதலைக்குடா விநாயகர் சாம்பியன் சுவீகரித்தது

( வி.ரி. சகாதேவராஜா)

பத்மநாபா அறிவாற்றக் கழகத்தின் ஏற்பாட்டில் பத்மநாபாவின் 26வது ஞாபகார்த்த தினத்தை யொட்டி மட்டக்களப்பு மாவட்ட உதைப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஒருங்கிணைப்பில் டிஸ்கோ-ரெட்ணம் விளையாட்டு கழகங்களின் ஒழுங்க மைப்பில் மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் இடம்பெற்ற உதை பந்தாட்ட சுற்றுப்போட்டியில் முதலைக்குடா விநாயகர் விளையாட்டு கழகம் முதல் இடத்தை பெற்று பத்மநாபா சவால் கிண்ணத்தை தட்டிக் கொண்டது.

அவர்களுக்கு இரண்டு லட்சம் ரூபாய் பணம் பரிசு வழங்கப்பட்டது.

மொத்தமாக 37 கழகங்கள் கலந்து கொண்ட இந்த போட்டியில் இறுதிப் போட்டிக்கு முதலைக்குடா விநாயகர் விளையாட்டு கழகமும் குருந்தையடி முன்மாரி டென் ஸ்டார் விளையாட்டு கழகமும் தெரிவாகி இருந்ததன.

இறுதிப்போட்டி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் டிஸ்கோ தலைவர் டெய்ன் வின்சன் தலைமையில் (12) மாலை இடம்பெற்றது.

இரு அணிகளும் குறித்த நேரத்தில் கோல்கள் போடாததன் காரணமாக பெனால்டி வழங்கப்பட்டது. அதில் வினாயகர் அணிவெற்றி 4-1 என்ற ரீதியில் பெற்று சவால் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டனர்.

இவ் நிகழ்வின் அதிதிகளாக முன்னாள் வட கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தோழர் சிறிதரன் அரசியல் ஆய்வாளரும் பத்மநாபா அறிவாற்றல் கழகம் ஸ்தாபகருமானதோழர் சோலையூரான் (ஜோதி) டான் தொலைக்காட்சியின் குழுமத்தின் பணிப்பாளர் எஸ்.குகநாதன், ஐரோப்பாவில் வசிக்கும் சமூகசெயற்பாட்டாளர்களான தோழர் உதயன் பாஸ்கரன், தோழர் சிராப் ராஜ், பொறியாளர் சந்தானம் சங்கர், பத்மநாபா அறிவாற்றல் கழகத்தின் தலைவர் வினோத் காந்த்,கல்விப்பிரிவு பொறுப்பாளர் மோகனதாஸ் உட்பட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து சிறப்பித்தனர்

முதலிடம் பெற்ற விநாயகர் அணிக்கு இரண்டு லட்ச ரூபாவும் இரண்டாம் இடம் பெற்ற டென் ஸ்டார் அணிக்கு ஒரு லட்ச ரூபாவும் மூன்றாம் இடத்தை பெற்ற நடரா ஜானந்தபுரம் சித்தி விநாயகர் விளையாட்டு கழகத்திற்கு ஐம்பதாயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.





# புனரமைக்கப்பட்ட மட்டக்களப்பு புதிய பாலம் மக்களின் பாவனைக்காக கையளிப்பு

எஸ்.எஸ்.அமிர்தகழியான்

மட்டக்களப்பு நகரில் அமைந்துள்ள இரண்டாவது பிரதான பாலமான புதுப் பாலம் அண்மையில் (28.06.2026) உடைந்து விழுந்த பாலத்திற்கு பதிலாக தற்காலிக பாலம் அமைக்கும் பணிகள் (09) மாலை முடிவடைந்தன. அதனைத் தொடர்ந்து (10) காலை 9 மணி அளவில் மீண்டும் மக்களின் போக்குவரத்திற்காக திறக்கப்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் சுமார் 3.5 மில்லியன் ரூபாய் செலவில் இந்த தற்காலிக பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் இந்த வீதியினை பயன்படுத்தும் பொதுமக்கள் பாலத்திற்கு முன்பு வழங்கப்பட்டுள்ள வீதி அறிவுறுத்தல்களை பின்பற்றி இப் பாலத்தின் ஊடாக மிகவும் அவதானமாக செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இதேவேளை நிரந்தரமாக புதிய பாலம் ஒன்று அமைக்கும் வரை கனரக வாகனங்கள் இப்பாதையை பயன்படுத்துவதை தவிர்க்குமாறு மட்டக்களப்பு போக்குவரத்து பொலிஸார் சாரதிகளுக்கு தெரிவித்துள்ளனர்.

இப்பாலத்தை மிக விரைவாக புனரமைத்து, மக்களின் இயல்பு போக்குவரத்தை மீட்டெடுப்பதற்காக இரவும் பகலும் அர்ப்பணிப்புடன் உழைத்த மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அதாவது,

இந்த அவசரப் பணியில் பங்கெடுத்த சகல அரச அதிகாரிகள், பொறியியலாளர்கள், தொழிலாளர்கள் மற்றும் பிரதேச மக்களுக்கு தமது நன்றியையும் பாராட்டுகளையும் மட்டக்களப்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் கைத்தொழில் மற்றும் தொழில்முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சர் சுனில் ஹந்துன்னெத்தி மற்றும் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு ஆகியோர் தெரிவித்துள்ளனர .



அஸ்னா மஹ்ரூப்



# கெஞ்சிப் பெற வேண்டியவை அல்ல அன்பும் அக்கறையும்...

வாழ்க்கையில் நாம் அதிகமாக ஏங்குவது அன்பையும் அக்கறையையும் தான்...

ஆனால், ஒரு விஷயத்தை நாம் மறந்துவிடக் கூடாது...

அன்பு என்பது ஒருபோதும் கெஞ்சிப் பெற வேண்டிய ஒன்றல்ல...

அது இதயத்திலிருந்து இயல்பாகப் பிறக்க வேண்டிய உணர்வு...

'என்னிடம் கொஞ்சம் பேசுங்கள்...',

'எனக்காக கொஞ்சம் நேரம் ஒதுக்குங்கள்...' என்று மீண்டும் மீண்டும் கேட்க வேண்டிய ஒரு உறவு, காலப்போக்கில் நம் சுயமரியாதையையும் மன அமைதியையும் காயப்படுத்தும்...

ஒவ்வொருவருக்கும் அவரவர் பிஸியான வாழ்க்கை இருக்கிறது...

வேலை... குடும்பம்... பொறுப்புகள்...

இவை எல்லாம் அனைவரின் வாழ்க்கையிலும் ஒரு பகுதிதான்...

ஆனால், நாம் ஒருவருக்கு உண்மையிலேயே முக்கியமானவர்களாக இருந்தால், அந்தப் பிஸிக்கு நடுவிலும் நமக்காக ஒரு நொடியாவது அவர்கள் ஒதுக்குவார்கள்...

ஏனெனில்...

நேரம் என்பது மணிநேரங்களால் அளக்கப்படுவதில்லை...

ஒருவருக்கு நாம் கொடுக்கும் முக்கியத்துவத்தால் அளக்கப்படுகிறது...

ஒரு செய்தி அனுப்ப சில வினாடிகள் போதும்...

ஒரு தொலைபேசி அழைப்புக்கு சில நிமிடங்கள் போதும்...

'நலமாக இருக்கிறாயா?' என்று கேட்க அதிக நேரம் தேவையில்லை...

மனம் இருந்தால் வழி இருக்கும்...

அதனால்...

அன்பிற்காகவோ, அக்கறைக்காகவோ யாருடைய பின்னாலும் ஓடிக்கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை...

உங்களை மதிப்பவர்கள் உங்களைத் தேடி வருவார்கள்...

உங்களை நினைப்பவர்கள் உங்களை அழைப்பார்கள்...

உங்களை உண்மையாக நேசிப்பவர்கள் உங்களை புறக்கணிக்க மாட்டார்கள்...

இதன் அர்த்தம் யாரையும் குற்றம் சொல்வது அல்ல...

ஒவ்வொருவருக்கும் அவரவர் வாழ்க்கைச் சூழ்நிலைகள் இருக்கின்றன...

ஆனால், ஒரு உறவு நிலைத்திருக்க வேண்டுமெனில், முயற்சி ஒரு பக்கத்திலிருந்து மட்டும் வந்தால் போதாது...

இரு இதயங்களிலிருந்தும் அக்கறையும், பங்களிப்பும், புரிதலும் தேவை...

அதனால்...

உங்கள் நேரத்தை மதியுங்கள்...

உங்கள் மன அமைதியைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள்...

உங்களை நேசிப்பவர்களுக்கும், உங்களை மதிப்பவர்களுக்கும் உங்கள் நேரத்தையும், உங்கள் அன்பையும் வழங்குங்கள்...

நினைவில் கொள்ளுங்கள்...

அன்பு என்பது கேட்டுப் பெற வேண்டியது அல்ல...

அதை உணர்ந்து வாழ வேண்டியது...

அக்கறை என்பது கட்டாயப்படுத்தி வாங்க வேண்டியது அல்ல...

அது இதயத்திலிருந்து தானாக வந்து சேர வேண்டியது...

உங்கள் மதிப்பை உணர்கிறவர்களுக்கே,
உங்கள் நேரமும் அன்பும்
மிகப் பெரிய பரிசாகும்...

SUPEEDSAM
EVERYTHING FOR PEOPLE

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

# பத்திரிகை

## வாரத்தில் ஒருமுறை உங்கள் கரங்களில் மின்னிதழாக...

வேதாந்தி : 004178 6264375

supeedsam@gmail.com

சுபீட்சம் வாட்ஸ் ஆப் குழுவில் இணைய இங்கே தொடவும்....

CLICK HERE